

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

தை - மாசி
பிப்ரவரி - 2020

மலர் 9 இதழ் 2

பொருளடக்கம்

| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| கீதை பிறந்தது எதற்காக? | 6 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 8 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 10 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| கிந்மீரவதபர்வம் | 13 |
| தமிழ் பாகவதம் | 15 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 17 |
| மாசி மாத விசேஷ தினங்கள் | 20 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ - 21 | 21 |
| வாழ்வின் நான்கு நிலைகள் | 23 |
| புராணக்கதை | 25 |
| மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்ரம் | 27 |
| காளிதாஸர் பிரம்மா துதி | 28 |
| சாங்கர போத ரத்னாவளி | 30 |
| வேதாந்த ஸாரம் | 32 |
| மகாபாரத சுருக்கம் | 34 |
| ஜய தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 36 |
| அத்வைத சித்தி வினா - விடை 1 | 38 |
| சென்னையில் ஸ்ரீ ஜகத்குரு | 41 |
| ஸ்ரீ மடம் முகாம் நிகழ்ச்சிகள் | 45 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.

நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்




## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்

வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

வேதாந்தம் படித்தால் என்ன கிடைக்கும் என்று சிலர் கேட்கின்றனர். மக்களும் தனம் வீடு, புத்ரன், பதவி, இப்படி பலவற்றை அடைவதற்காக நிறைய பாராயணங்கள் செய்கின்றனர். அதனால் லாபமும் அடைகிறார்கள். அதற்குப் பிறகு இன்னொரு ஆசை, இப்படி போய் கொண்டிருக்கிறதே தவிர முடியவில்லை. முடிவான சாஸ்வதமான ஆனந்தத்தை தருவது வேதாந்தம் தான் என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை. ப்ரம்மஸத்யம் என்று உணர்ந்தவர்கள் ஜீவன் முக்தர்களாய் உலகில் இருப்பர் என்று வேதாந்தம் கூறும்.

அவர்களுடைய லட்சணம் என்ன? இதோ ஸ்ரீசங்கரர் கூறுகிறார் ''உபாதிகளுடன் இவ்வுலகில் ஜீவன் முக்தர்கள் இருந்தாலும், அவைகளினால் பாதிக்கப்படாதவர்களாய் ஆகாசம் போல் எல்லாம் தெரிந்தவரானாலும் மூடன் போல் திரிவர். ''

இப்பேர்பட்ட ஞானிகள் நிறைந்த நாடு நமது என்று பெருமை கொள்வோம். ஸமீப காலத்தில் நம்மோடு வாழ்ந்த இரு மஹான்களைப் பற்றி பேசுவோம். முதலில் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள். இன்னொருவர் ஸ்ரீ ரமணமகரிஷி ஆவர்.



## ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்

காஞ்சீ நகரில் சுமார் 200 வருடங்களுக்கு முன் ஓர் அவதாரம் நிகழ்ந்தது. அதுதான் அவதூதராய் 40 வருடங்கள் வாழ்ந்து அத்புதங்கள் நிகழ்த்தி மறைந்த சேஷாத்ரி ஸ்வாமிகள் அவதாரம். காமகோடி பரம்பரையில் காஞ்சியில் உதித்தவர். ப்ரம்ம ஞானியாய் சஞ்சரித்தவர். எவ்வளவோ அற்புதங்களை அவர் நடத்தினார். அவைகளுக்காக அவர் ஸங்கல்பிக்கவில்லை. தானாகவே நிகழ்ந்தன. திருவண்ணாமலைக்குச் சென்று பித்தனைப் போல் குழந்தையைப் போல் உபநிஷத் வாக்யத்திற்கேற்ப திரிந்தார்.

பாமரன் முதல் பண்டிதர் வரையில் எல்லாருக்கும் அருளாசி வழங்கியவர். எப்போதும் ப்ரம்மத்திலேயே திளைத்தவர். ஸ்ரீசங்கரர் சொன்னது போல் ஜீவன் முக்தராகி வசந்த காலம் போல் எல்லாருக்கும் ஹிதம் செய்தவர். மகா பெரியவாளும் நான் எப்போது அவர் போல் ஆவேன் என்று கூறியது உண்டு. (பெரியவாளே ஜீவன் முக்தர்) அவரைப் போற்றும் வகையில் மகாபெரியவா சின்ன காஞ்சியில் அவருடைய வீட்டைக் கண்டு பிடித்து ட்ரஸ்ட் ஏற்படுத்தி ப்ரதி வருஷம் ஆராதனை, யௌளம், ஜயந்தியும் நடக்க ஆணையிட்டார். அவைகள் நன்றாகவே இன்றளவும் வரதராஜர் கோயில் அருகில் நடக்கின்றன. அவரது 150ஆவது ஜயந்தியை பிப்ரவரி மாதம் 13ஆம் தேதி பக்தர்கள் கொண்டாடுகிறார்கள். ( நிகழ்ச்சி நிரலைப் பார்க்கவும்). அவரது மலரடி பணிவோம், முக்தி பெறுவோம்.

# ஸ்ரீ காமகோடி சேஷாத்ரி ஸ்வாமிகளின் 150 ஆவது ஹஸ்தஜயந்தி விழா

### 13-2-2020 வியாழக் கிழமை நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| காலை 7 மணிக்கு | நாதஸ்வர இசை |
| 8 மணிக்கு | மாடவீதிகளில் உஞ்சவ்ருத்தி |
| 8-15 மணிக்கு | நிவாஸ மண்டபத்தில் மூக பஞ்சசதி பாராயணம் |
| 9-45 மணிக்கு | ராதா கல்யாணம், செங்கல்பட்டு வியயேந்த்ர பாகவதர் காஞ்சீ ஸீதாராம பஜனை மண்டலி |
| 10-45 மணிக்கு | நாட்யாஞ்சலி செல்வி அ ஸ்யாமளா |
| 11 மணிக்கு | ஜயந்தி விழா சிறப்பு சொற்பொழிவு |
| 11-15 மணிக்கு | புல்லங்குழல் இசைக் கச்சேரி மயிலை கோகுல க்ருஷ்ணன் குழுவினர் |
| 12 மணிக்கு | அன்னதானம் |

இப்படிக்கு
அறம்காவலர்கள் ஸ்ரீகாமகோடி சேஷாத்ரி ஸ்
வாமிகள் நினைவு அறக்கட்டளை.

## ஏக தின கோடி காயத்ரி ஜபம்




ஸ்ரீ ஆசார்யார்களின் ஆசிகளுடன் உலக மக்களின் நலன் வேண்டி நடைபெற விருக்கும் ஒருநாள் கோடி காயத்ரி ஜபத்தில் கலந்து கொள்ள, **ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் பஞ்சமி சேவா ட்ரஸ்ட்** மற்றும் **ஸ்ரீ சங்கரா டி.வி** அனைத்து அந்தணர் பெருமக்களையும் அன்புடன் அழைக்கிறார்கள்.

**நாள் : 1 - மே 2020**

**இடம் :** வள்ளுவர் குருகுலம் உயர்நிலைப்பள்ளி
மேற்கு தாம்பரம், சென்னை - 600 045 (தாம்பரம் பஸ் நிலையம் அருகில்)

தொடங்கும் நேரம் : **காலை 5.30 மணிக்கு மேல் 8.30 மணிக்குள்**
**சந்தர்ப்பணை : 12.30 மணி முதல்**
ஜபத்தில் பங்கேற்க தயவு செய்து உங்கள் பெயர், வயது, கோத்திரம், தொலைபேசி எண் ஆகிய விவரங்களை
6382308117 / 6382152792 / 7358210965 எண்களுக்கு
by SMS / Whatsapp



# ஜீவன்முக்தர் ஸ்ரீரமணமகரிஷி

சுமார் 200 வருடங்களுக்கு முன் திருச்சுழி என்னும் ஊரில் வெங்கட்ராமன் என்னும் பெயரில் பிறந்த பிள்ளை நம் பாக்யம் ரமணராக மாறியது. மரணத்தைக் கண்டு பயந்த அவர் மாபெரும் ஆவேசத்திற்கு ஆளாகி தெளிந்து ப்ரபோதம் அடைந்து ரமணராகினார். திருவண்ணாமலை அவருக்குப் புகலிடம் கொடுத்தது. ஒரு குகையில் தவம் இயற்றி ப்ரம்ம ஸ்வரூபத்தை ஆனந்த ஸ்வரூபத்தைக் கண்டவர் அங்கேயே பல நாட்கள் தங்கி ஆஸ்ரமம் ஒன்றை நிறுவினார். நான் யார்? என்பதே அவருடைய தத்வ ஆராய்ச்சி. ''நான்'' எங்கிருந்து வருகிறது என்று பார். பேதங்கள் அனைத்தும் போய்விடும். ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தி இம்மூன்றுக்கும் ஆதாரம் இந்த ''நான்'' தான். இது ஆனந்த ஸ்வரூபம். இதை அடைவதை விட பெரிய லாபம் இல்லை. இப்படி உபதேசித்தவர் மட்டுமில்லை, ஒரு ஜீவன் முக்தர் எப்படி இருப்பாரோ அப்படி இருந்தவர். அத்வைதத்தை உறுதிபட சொன்னாலும் பக்தி யோகத்தையும் வலியுறுத்தியவர். நம் நாட்டு மக்கள் மட்டுமல்லாமல் வெளி நாட்டவர்களும் அவர்பால் ஈர்ப்பு கொண்டு வந்தனர். பால் ப்ரன்டன் என்பவர் மகாபெரியவா மூலம் ப்ரம்மஞானியான ஸ்ரீரமணரைக் கண்டவர் என்பது அனைவருக்கும் தெரியும். உபதேச உந்தியார், அக்ஷரமணிமாலை, நவமணிமாலை உள்ளது நாற்பது போன்ற நூல்களும் அவரால் இயற்றப்பட்டன. வஸந்தகாலம் போல் எல்லாருக்கும் நன்மை விழைந்தவர், ஆத்மராமனாய் இருந்த ஜீவன் முக்தர்.

வேதாந்தம் படித்தால் என்ன லாபம் என்று கேட்கிறார்கள் என்று தொடக்கத்தில் சொல்லியிருந்தோம். ஆத்ம லாபம் கிடைக்கும். இதைவிட என்ன லாபம் வேண்டும்? இப்போது இருக்கும் அமைதியின்மை போகும், உள்ளொளி பிறக்கும். இவர்களை நினைத்தாலே போதும் இவை எல்லாம் கிடைக்கும் என்று கூறிக்கொண்டு நம்மிடையே வாழ்ந்த ஜீவன் முக்தரான மகாபெரியவா ஸ்ரீசரணத்தில் இவ்விதழை ஸமர்ப்பிக்கிறோம்.

# கீதை பிறந்தது எதற்காக?

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



இந்த ஞான உபதேசத்தை

राजविद्या राजगुह्यं पवित्रमिदमुत्तमम् ।
प्रत्यक्षावगमं धर्म्यं सुसुखं कर्तुमव्ययम् ।।

வித்தைகளுக்குள் அரசு; மறைத்து வைக்க வேண்டியவைகளுக்குள் அரசு, இதைவிட உத்தமமான ரஹஸ்யம் கிடையாது. இவ்வளவு உத்தமமான ரஹஸ்யத்தை கர்மயோகத்திற் குரித்தான அர்ஜுனனுக்குச் சொல்வதால் அவனுக்குச் சற்று குழப்பமேற்படுமாயினும் அவன் உத்தமாதிகாரியானபடியால் அவனைத் தெளிவுபடுத்திவிட முடியும் என்பது பகவானுடைய தைரியம்.

आरुरुक्षोमुनेर्योगं कर्म कारणमुच्यते ।
योगारूढस्य तस्यैव शम: कारणमुच्यते ।। (6.3)

மனம் ஒருமைப்பட்டு த்யான யோகம் ஸித்திக்கும் வரை த்யான யோகம் ஸித்திப்பதற்கு கர்மயோகம் காரணமாகிறது. அவ்விதம் மனம் ஒருநிலைப்பட்டதற்கு மேல், தத்வஞானத்திற்குச் சாதனமாகக் கீதையில் நைஷ்கர்ம்யம், ஸந்யாஸம் என்னும் பதங்களால் சொல்லப்பட்ட சமம் காரணமாகிறது. ஒரு நிலையில் ப்ரவ்ருத்தி காரணமாகின்றது. ஒரு நிலையில் நிவ்ருத்தி காரணமாகிறது. இதைப் போன்ற சில சூசனை வாக்யங்களில் அவனுடைய குழப்பம் தீரத் தெளிவான பாகுபாட்டை பகவான் சமயம் பார்த்து உணர்த்துகிறார். ஆனாலும் அவன் கர்மயோகத்திற்கு அதிகாரியானதால் ஸந்யாஸ மார்க்கம், யோக மார்க்கம், இது போன்றவைகளுக்கெல்லாம் கர்மயோகம் சளைத்ததன்று என்று உத்ஸாகமூட்டுகிறார். சில விடங்களில் கர்ம யோகம் எந்த இடத்திற்குக் கொண்டு போய் விடுகிறதோ, ஞான யோகமும் அதே இடத்திற்குக் கொண்டு போய் விடுகிறது என்கிறார். ஞான யோகமும், கர்ம யோகமும் ஒன்றே என்கிறார். அக்னிஹோத்திரத்தை விட்டவனும், உலக கார்யங்களை விட்டவனும் ஸந்யாஸியுமல்ல, யோகியுமல்ல, சமபுத்தியுடன் தனது கர்மாவை நன்றாகச் செய்கிறவனே ஸன்யாஸியும், யோகியும் ஆவான் என்கிறார். ஆனாலும் இவ்வளவு கர்மாக்களுக்கும் ஞானத்திலேயே பூர்த்தி என்கிறார்.

सर्वकर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते । (4.33)

சம புத்தியுடன் ஈச்வரார்ப்பணமாகத் தன் தன் கர்மாக்களைச் செய்ய வேண்டும். அவ்விதக் கர்மாவினால் ஆத்மாவின் உண்மையான பூர்ண ஸ்வரூபம் ஈச்வரானுக்ரகத்தினால் தெளிவுபடும். பிறந்தவர்கள் அடைய வேண்டிய பேறு அதைவிடப் பெரியதொன்றுமில்லை என்று இந்த முறையில் படிப்படியாக அர்ஜுனனைப் பகவான் தெளிவுபடுத்திக் கொண்டு போகிறார். கீதையின் முடிவில், "அர்ஜுனா? உனக்குக் கர்மாவைச் சொன்னேன்" என்று முடிக்கவில்லை.

" इति ते ज्ञानमाख्यातम् ।। (18.63) ஞானத்தைச் சொன்னேன் என்கிறார். அர்ஜுனனோ करिष्ये वचनं तव ।। (18.73)

"நான் கர்மத்தைச் செய்கிறேன்" என்கிறான். உபதேச ஞானத்தால் சந்தேகம் விலகிற்று. ஸந்தேகம் விலகியதால் சோகம் விலகிற்று. சோகம் விலகியதால் சோகத்தால் தடைபெற்றிருந்த ஸ்வதர்மமான யுத்தம் ஸமநிலையோடு கூடிய கர்ம யோகமாக ஆரம்பமாகி ஜயத்துடன் முடிவு பெற்றது.

இவ்விதம் ஸமநிலையோடு ஈச்வரார்ப்பணமாக செய்யப்பட்ட கர்மயோகம் அர்ஜுனன் பூர்ண ஆத்ம ஸாக்ஷாத்காரத்தையடைய அடிகோலிற்று. உபதேச ஞானத்தால் மனதிலுள்ள சந்தேகம் நிவர்த்தியாகிறது. ஸந்தேக நிவர்த்தியான பின்னர் அவ்வாறு உபதேசிக்கப்பட்ட ஞானமே அனுபவ ஸாக்ஷாத்காரமாவதற்குக் கர்ம யோகம், தியான யோகம், பக்தி யோகம் இவைகள் ஸாதனங்களாகின்றன.

इति ते ज्ञानमाख्यातं गुह्यात् गुह्यतरं मया ।
विमृश्यैतदशेषेण यथेच्छसि तथा कुरु ।। (18.63)

என்று பகவான் சொன்னார் என்று அர்ஜுனன் பதிலுரைத்தான். ஸம்சயமே எல்லாவற்றிலும் அமங்களம், ஸந்தேக நிவர்த்தியைவிட மேலான மங்களமில்லை.

स्थितोस्मि गतसंदेह: करिष्ये वचनं तव ।। (18.73)

ஸாரதியான கண்ணன், ஸந்தேக நிவர்த்தியைத் தந்த யோகேச்வரனானான். காண்டீபம் கை நழுவி அழுத பார்த்தன் தனுர்தரனானான். யோகேச்வரனுடைய யோகோபதேசத்தால் பார்த்தன் தனுர்தரனானான். ஸந்தேக நிவர்த்தி செய்து சோகத்தை அகற்றித் தீரத்தன்மையைத் தந்த ஆச்சார்யனும் இத்தகைய பெரும் பேற்றைப் பெற்ற சீடனும் இருக்குமிடமே உலகத்தில் பரம மங்களகரமான இடம்.

यत्र येगेश्वर: कृष्ण: यत्र पार्थो धनुर्धर: ।
तत्र श्रीर्विजयो भूति: ध्रुवा नीतिर्मतिर्मम । (முற்றும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### நற்செயல் நன்மை தரும்



***கெட்டவனுக்கு அமுதமும் விஷமாகும் நல்லவனுக்கு நஞ்சும் அமுதமாகும். கெட்டவனை உடன் பிறந்தவரும் கைவிடுவர். நல்லவனுக்கு புல்லும் பூண்டும் விலங்குகளும் கூட உதவும்f***

புரஞ்ஜயன் என்ற அரசன் நேர்மையுடன் அரசாண்டான். துஷ்ட வன விலங்குகள் நாட்டில் நுழைந்து துன்புறுத்தவே அவற்றை அடக்க வேட்டையாடச் சென்றான். மான் தோலாலான ஆடை உடுத்தித் தவத்திலிருந்த முனிவரை மானென நினைத்து அம்பால் அடித்தான். அவர் துடி துடித்துக் கீழே விழுந்தார். அவரது ஓலம் கேட்டு அருகில் வந்த அரசன் அவர் மரித்துவிட்டதை உணர்ந்து அவரைச் சேர்ந்தவர்களிடம் இதனைத் தெரிவித்து மன்னிப்புக் கோர எண்ணித் தன் வீரர்களை நாற்புறமும் அனுப்பித்துத் தானும் தேடினான். ஒரு ஆசிரமத்தில் தவத்திலிருந்தவரின் பெற்றோரை கண்டு விபரம் தெரிவித்தான்.

அவர்களுக்குத் தவத்திலிருந்தவனுக்குக் கேடு நேராது என்ற நம்பிக்கை இருந்ததால் அரசனது வார்த்தையை அவர்கள் நம்பவில்லை. அரசன் தான் தவத்திலிருந்தவரைக் கொன்றதனால் பெரும் பாவம் சூழ்ந்துள்ளதால் அதற்கேற்பப் பரிஹாரம் கூறுமாறு முனிவரை வேண்டினான். முனிவர் தபத்திலிருந்தவர் அடிபட்ட இடத்திற்கு அரசனை அழைத்துச் சென்றார்.

அங்கு யாரையும் காணவில்லை. அடிபட்டவரின் உடல் கிடைக்கவில்லை. நன்கு தேடிய பிறகு தன் பரிவாரத்திலிருந்த ஒருவரைச் சுட்டிக் காட்டிய முனிவர் “இவரைத் தான் அடித்துக் கொன்றீரா? என்று கேட்டார். அரசன் நன்கு அவரை நோக்கி ஆம் என்றான்” இறந்தவன் பிழைத்தது எப்படி என்று அரசனுக்கு வியப்பு மேலிட்டது. அவரையே அரசன்

கேட்டான். அவர் சொன்னார் - "அரசே ! தங்களால் அடிப்பட்ட நான் கீழே விழுந்தேன். வலியின் கடுமையால் புரண்டு உருண்டேன். வேதனை மிகுந்து பல்லைக் கடித்தேன். பின் நினைவிழந்தேன். சிறிது நேரம் சென்றதும் எனக்கு நினைவுக்கு வந்தது. பூமியில் புரண்ட போது என் வாயில் ஒரு பச்சிலைக் செடி சிக்கியது. வேதனையால் பல்லைக் கடித்த போது அது சிதைந்து அதன் சாறு என்னுட் சேர்ந்தது. அது ஒரு மிருதஸஞ் சீவனிச் செடி. அதனைத் தேடிச் சென்றால் கிட்டாது. அதன் பெருமையால் இறந்த நான் பிழைத்தெழுந்தேன். அடிப்பட்ட புண்ணும், வலியும் மறைந்து விட்டதை உணர்ந்தேன். பெற்றோர்களின் ஆசி பெற்று மறுபடி தவம் செய்யலாம் என இங்கு வந்தேன் என்றான். "


முனிவர் கூறினார் - அரசே! காட்டில் வசிக்கின்ற எங்களுக்கு எங்களது நல்வாழ்க்கை ஒன்றே பாதுகாப்பு. எங்களை வன விலங்குகள் சீண்டுவதில்லை. விஷச்சூழல் கூட எங்களை பாதிப்பதில்லை. மரணம் உரிய காலத்தைத் தவிர மற்ற நேரத்தில் எங்களை அணுகுவதில்லை என்றார்.

" முனிவரே ! உங்களது நல்வாழ்க்கை முறை யாது?" என்று அரசன் கேட்டதற்கு முனிவர் கூறினார். நாங்கள் போலி வாழ்க்கை முறைகளைக் கையாள்வதில்லை. பிறரை வஞ்சிப்பதோ, நிந்திப்பதோ, துன்புறுத்துவதோ இல்லை. ஏற்றத் தாழ்வின்றி அனைவருக்கும் இயன்ற அளவில் உதவுவோம். மற்றவரை இன்புறச் செய்த பிறகே தன் தேவைகளைக் கொள்ளுவோம். நல்ல இடத்தில் வசிக்கிறோம். அதன் தூய்மை கெடாதவாறு பாதுகாக்கிறோம். அமைதியும், ஒற்றுமையும், நல்லுணர்வும் பேணி வாழ்கிறோம். இவையே அகால மரணத்தைத் தடுக்கின்றன. அரசே ! எங்களுக்கு புல்லும், பூண்டும் கூட உதவுகின்றன. வன விலங்குகளும், எம்மிடம் அன்புடன் பழகுகின்றன. எவ்வளவு தேடியும் கிடைக்காத மிருதஸஞ்சீவனி அடிப்பட்டு வேதனையால் பற்களைக் கடிக்கும் போது வாயில் சிக்கி உயிரை தந்ததைக் கண்டீர். ஒரு ஜீவராசியையும், துன்புறுத்தாத எங்கள் வாழ்க்கை முறை அனைத்து ஜீவராசிகளையும் எமக்கு அனுகூலமாக்கித் தந்துள்ளது என்றார்.

அரசன் கலாசாரம் மிக்க தன் நகரத்தினரிடையே இந்தப் பண்பை எப்படிப் புகுத்துவது என்ற சிந்தனையுடன் நாடு திரும்பினான்.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



## ஷ்யாமா சாஸ்திரிகள் ஜயந்தி உற்சவம்

ஷ்யாமா காஞ்சன சந்திரிகா ----காமாயமே கல்பதாம்

காமாக்ஷ்யாஹா கருணா கடாக்ஷ லஹரி

சௌந்தர்யலஹரி என்று நாம் கேட்டிருக்கிறோம். இது அம்பாளை பற்றி ஆச்சாரியாள் சாக்ஷாத் பரமேஸ்வரரிடமிருந்து, கைலாசத்திலிருந்து வாங்கிக் கொண்டுவந்த ஸ்தோத்திர க்ரந்தம். மந்திர ரூபமான, உபாசமான க்ரந்தம். அந்த சௌந்தர்ய லஹரியை பாராயணம் செய்கிறோம். ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் ஒவ்வொரு விசேஷமான பலஸ்ருதி இருக்கிறது. பொதுவாக பாராயணத்திற்கு புண்ணியம் உண்டு. இந்தந்த ஸ்லோகத்தை இந்த மாதிரி யந்திரம் எழுதி, இந்த நாளைக்கு நெய்வேத்தியம், இந்தெந்த நெய்வேத்தியங்களைப் பண்ணி, அதை உபாசனை பண்ணும் பொழுது பலன் தரும். வர்ணனை ரூபத்தில் இருக்கக் கூடிய ஸ்தோத்திரம், மந்திரமே ஸ்தோத்திர ரூபத்தில் அமைந்து இருக்கக் கூடிய விசேஷமான அமைப்பு, அந்த சௌந்தர்ய லஹரி, நமக்கு அநேக பலனை கொடுத்துக் கொண்டு இருக்கிறது.

அந்த லஹரி மாதிரி, இன்னொரு லஹரி, அது என்னவென்றால் காமாஷயாஹா கருணா கடாக்ஷ லஹரி. பார்த்தும், பார்க்காம என்று சொல்லுகிறோமே, அந்தமாதிரி, இருந்தால் கூட, நிறைய பலன் உண்டு. கருணா கடாக்ஷ லஹரி-கடாக்ஷத்தின் பிரவாஹம். அப்போ, ஒரு இடத்திலே, உற்பத்தி என்று ஒன்று நடந்து கொண்டே இருக்கிறது. தொடர்ந்து ஊற்று வந்து கொண்டே இருக்கிறது. வர வரத்தான் கொடுக்க முடியும். அதனால், கருணை என்கிற கருணா கடாக்ஷம்.

அந்த அம்பாளுடைய கருணா கடாக்ஷம் என்பது பிரவாகமாக வந்து கொண்டிருக்கிறது. பிரவாகம் என்பதில் இரண்டு வகை இருக்கு. அது ஜீவநதியிலே இருக்கக் கூடிய பிரவாகம் போன்றது. காட்டாற்றிலே பிரவாகம் வரும். ஆனால் ஜீவ நதியிலிருந்து

வரக் கூடிய இந்தப் பிரவாகமானது-ரமநீயம் பிரசன்னாம்பு சன் மனுஷ்ய மனோயதா - என்ற ரீதியிலே, அது அழகாவும் இருக்கும், யாருக்கும், எந்த விதத்திலே, எந்த நேரத்திலே அனுக்ரகம் பண்ணுமோ, அந்த விதத்திலே அமையும் அது. அப்படி இந்த அம்பாளுடைய கருணா கடாக்ஷ பிரவாகமானது நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடியதாக இருக்கிறது.

பொதுவாக உபாசனை என்பது பல வகைப்படும். ஜபம் பண்ணி, தியானம் பண்ணி, உபாசனை பண்ணுவது, யந்திரத்தை ஸ்தாபிதம் பண்ணி பூஜை பண்ணுவது, ஸ்லோகங்கள் மூலமாக, அம்பாளை ஸ்துதி பண்ணுவது, சங்கீதத்தின் மூலமாக உபாசன பண்ணுவது என்று பலவகைப் படும். அந்த வகையிலே நாதோபாசனையின் மூலமாக உபாசனை பண்ணியவர்கள் சங்கீத மும்மூர்த்திகள். அதிலே குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால் ஷ்யாமா சாஸ்திரிகள்- இவர் அம்பாளை குறித்து நாதோபாசனை மூலமாக உபாசனை செய்துள்ளார்.

ஒவ்வொரு ஊரிலே, ஒரு விசேஷம் சொல்கிறார்கள். சிதம்பரத்தை தரிசனம் செய்தால் முக்தி. காசிலே வேறு சொல்கிறார்கள். ஸ்மரணாத் அருணாசலம்-நினைத்தாலே முக்தி என்று சொல்கிறது திருவண்ணாமலை. இங்கே வந்து பிறந்தால் முக்தி என்று சொல்லக்கூடிய ஊர் இந்த திருவாரூர், கமலாலயம் ஊர். அந்த ஊரிலே, சங்கீத மும்மூர்த்திகள் மூணு பேரும் பிறந்திருக்கிறார்கள் என்பது விசேஷமான ஒன்று. அங்கேயே, பஞ்சரத்னக் கீர்த்தனைகள், நவாவர்ண கீர்த்தனைகள், நவக்ரஹ கீர்த்தனைகள், ஒவ்வொரு க்ஷேத்திரத்தினுடைய ஸ்தல புராணமும் தெரியும் படியாக, எல்லா ஊர்களைப் பற்றி, இப்படி எல்லாம் பாடியுள்ளனர். அதிலே, இந்த ஷ்யாமா சாஸ்திரிகளுடைய உற்சவத்தை, வெகு விமரிசையாக, இங்கு வந்து எல்லோரும் சேர்ந்து நடத்துவது என்பது விசேஷம். ஏற்கனவே சில வருடங்களாக இந்த சங்கீத உற்சவம் நடந்துகொண்டு இருக்கிறது. நம்முடைய பெரியவா (ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள்) அவர்கள், மும்மூர்த்திகள் பிறந்த இடத்தையும் வாங்கி, ஒரு டிரஸ்ட் ஏற்பாடு செய்து, அங்கு நித்தியபடி பஜனையோ, சங்கீதக் கிளாஸ்களோ, பாடங்களோ, அல்லது வருஷா வருஷம் சங்கீதக் கச்சேரிகளோ நடப்பதற்கு ஹேதுவாக, ''சங்கீத மும்மூர்த்திகள் டிரஸ்ட்'' என்று ஒன்றை ஏற்பாடு செய்து திருவாரூரில் நடந்து வருகிறது. சங்கீதத்திற்காக பெரியவா அவர்கள் நிறைய செய்திருக்கிறார்கள்.. அவர்களுடைய ஏற்பாட்டிலே வருஷத்திற்கு, நூறு கச்சேரிகள் பெரியவாளுடைய அனுக்ரகத்தினோட-நவராத்திரி, சாதுர்மாஸ்யம் இதுமாதிரி எல்லாம்,

பெரியவாளுடைய ஆசிர்வாதத்தோடு நடந்து வருகிறது. இது மாதிரி உற்சவங்கள் நிறைய நடந்து வரவேண்டும். இங்கே சொன்னது போல ரசிகர்கள் நிறைய தேவை. வித்வான்கள் இருக்கிறார்கள், கோவில்கள் இருக்கிறது, அந்தக் கோவில்கள் நடத்த மனுஷாள் தேவை. வேதம் படித்த வித்வான்கள்களும் இருக்கிறார்கள். அவர்களை கௌரவிக்க, அவர்களுடைய பிரவசனத்தை கேட்பதற்கு மனுஷாள் தேவை. அந்த மாதிரி, இந்த சங்கீத உலகத்திலே, நிறைய ரசிகா, விஷயம் தெரிந்த ரசிகா, உற்சாகப்படுத்தக்கூடிய ரசிகா நிறைய தேவை. நிறையபேர் இப்போது அவர்களுடைய குழந்தைகளை சங்கீதம், சமஸ்க்ருதம், நாட்டியம், அதே மாதிரி, ஏதோ ஒரு கலை சம்பந்தமா படிக்க வைக்கணும் என்று சொல்லி உற்சாகப்படுத்தி வருகிறார்கள். இப்போது சங்கீதத்தினுடைய பலத்தைப் பற்றி அனைவரும் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அது பக்திக்கு உபயோகப்படுகிறது, பொழுது நல்லவிதமாக போகிறது. சங்கீதத்தின் மூலமா வியாதியெல்லாம் கூட குறைகிறது என்று இப்படி பல ஆராய்சிகள் நடந்து கொண்டு இருக்கிறது.

சாஸ்திரத்திற்கு விரோதம் இல்லாமல், கலைகள் வளர வேண்டும் என்கிற உத்தேசத்தோடு சங்கீத வித்தையை, சங்கீத விஞ்ஞானத்தை, நாதோ உபாசனையை, நல்ல முறையிலே, குரு பக்தியோடு செய்து, மென்மேலும் அம்பாளுடைய அனுக்ரஹமும், குருவின் அனுக்ரஹமும் மென்மேலும் வருவதற்கு அனைவரும் முயற்சிக்க வேண்டும்.


॥ ஸ்ரீ: ॥

இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.

பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை

Typing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி

எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.

க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்

எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.

(Transliteration in all Languages done here.)

Grantham to Devanagiri, Grantham to Tamil,

மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்

உதாத்தம், அநுதாத்தம் இவற்றுடன்

அச்சிட்டு தரப்படும்.

**Contact : V.K.N. Enterprises (Printer)**

Mylapore, Chennai - 600 004 Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com

# கீர்மீரவதபர்வம்

## (யுதிஷ்டிரர் தௌமியர் உபதேசப்படி ஸூர்யனைத் துதித்ததும்; ஸூரியன் அக்ஷய பாத்திரம் கொடுத்ததும்)

பிரம்ம லோக முதலிய ஏழு உலகங்களிலும் மற்ற எல்லா உலகங்களிலும் ஸூர்யனுக்கு மேற்படும் பிராணி இருப்பதாக நான் நினைக்கவில்லை. வீர்யமுள்ளவைகளும், பெரியவைகளுமான வேறு பிராணிகளும் இருக்கின்றன. ஆனால் பிரகாசமும், மஹிமையும் உமக்கு எப்படியோ அப்படி அவைகளுக்கு இல்லை. ஒளிகளெல்லாம் உம்மிடத்தில் இருக்கின்றன. நீர் எல்லாத் தேஜஸுகளுக்கும், பதியானவர். பூமி, ஜலம், தேயு, வாயு, ஆகாயம், புத்தி, ஸத்யம், தர்மம், ஞானம், வைராக்கியம், ஐஸ்வர்யம் முதலிய எல்லாம் உம்மிடத்தில் இருக்கின்றன. விஷ்ணுவினால் அஸுரர்களின் கொழுப்பானது எந்த ஸுதர்சனமென்கிற சக்கரத்தால் நாசம் பண்ணப்பட்டதோ அது விஸ்வகர்மாவினால் உம்முடைய தேஜஸினால் செய்யப்பட்டது. நீர் கோடைக் காலத்தில் எல்லாப் பிராணிகளுடைய ஸாரத்தையும், எல்லா ஒஷதிரஸங்களுடைய ஸாரத்தையும் கிரணங்களால் எடுத்துத் திரும்பவும் மழைக்காலத்தில் விடுகிறீர். உம்முடைய சில கிரணங்கள் கொளுத்துகின்றன; சில தாபத்தை உண்டு பண்ணுகின்றன; மழைக்காலத்தில் சில அப்படியே மேகங்களாகக் கர்ஜிக்கின்றன; மின்னுகின்றன; மழையையும் பெய்கின்றன. குளிராலும், காற்றாலும் பீடிக்கப்பட்ட பிராணிகளை உம்முடைய கிரணங்கள் எவ்விதம் சுகப்படுத்துமோ அவ்விதம் நெருப்பும், போர்வைகளும் கம்பளங்களும் ஸுகப்படுத்துகிறதில்லை.

1. பதின்மூன்று தீவுகளுடன் கூடிய பூமியைக் கிரணங்களால் பிரகாப்படுத்துகிறீர். மூன்று உலகங்களின் க்ஷேமத்திற்குமாக நீர் ஒருவரே பிரவிருத்திக்கிறீர். உம்முடைய உதயமில்லாவிட்டால் இவ்வுலகமானது இருளடைந்து விடும். தர்மம், அர்த்தம், காமம் இவைகளில் புத்திமான்கள் பிரவிருத்தியார். பிராம்மண, க்ஷத்ரிய வைசியர்களின் கூட்டங்களால், உம்முடைய அனுக்ரஹத்தாலேயே, அக்னிஹோத்ரம் பசுபந்தம், இஷ்டி மந்திரம், யாகம், தவம் முதலிய கார்யங்கள் செய்து முடிக்கப்படுகின்றன; ப்ரம்மாவின் எந்தப் பகலானது ஆயிரம் யுகம் அளவுள்ளதென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அதற்கு முதலாயும், கடைசியாயும் நீரே இருக்கிறீரென்று கால (தத்துவ)ம் தெரிந்தவர்களால் சொல்லப்படுகிறீர். மனுக்களுக்கும், மனுபுத்ரர்களுக்கும் மனிதரில்லாத ஜகத்துக்கும் எல்லா மந்வந்தரங்களுக்கும் அவற்றிலுள்ள ஈஸ்வரர்களுக்கும் நீர் ஈஸ்வரர். பிரளயகாலம் வந்தவுடன், உம்முடைய கோபத்தால் வெளிவந்த ஸம்வர்தக்கமென்னும் நெருப்பானது மூவுலகத்தையும், சாம்பலாக்கிவிட்டு நிற்கின்றது. உம்முடைய

கிரணத்தாலுண்டான அனேக நிறமுள்ள பெரியமேகங்கள் ஐராவதமென்னும் மேகங்களுடனும், இடிகளுடனும் கூடிக் கொண்டு நான்கு விதமான எல்லாப் பிராணிகளையும் ஜலத்தில் முழுகச் செய்கின்றன. சரீரத்தைப் பன்னிரண்டாகப் பிரித்துக் கொண்டு, பன்னிரண்டு ஸூரியராக இருக்கும் தன்மையை அடைந்திருக்கும் நீர், ஒன்று சேர்ந்து ஒரே ஸமுத்திரமாயிருக்கிற யாவற்றையும் கிரணங்களால் உலர்த்தி விடுகிறீர். உம்மை இந்திரன் என்கிறார்கள். நீரே ருத்ரர்; நீரே விஷ்ணு; நீரே பிரம்மா; நீரே அக்னி; ஸூக்ஷ்மமான மனமும் நீரே. ப்ரபுவும் நீரே, நித்யமான ப்ரம்மமும் நீரே, நாசம் பண்ணுகிறவரும் நீரே, உண்டு பண்ணுகிறவரும், பிரகாசிப்பவரும் கிரணங்களின் வரிசையுள்ளவரும் விருக்ஷாகபியும் ஜகத்துக்கு இருப்பிடமானவரும், மேகரூபமாகி வர்ஷிக்கிறவரும், போஷிக்கிறவரும், மித்ரரும், தர்மரூபமானவரும் ஆயிரம் கிரணங்களுள்ளவரும் அதிதியின் புத்திரரும் தாபத்தை உண்டாக்குகிறவரும், கிரணங்களுக்குப் பதியும் நீரே. மார்த்தண்டரும், பூஜிக்கத்தக்கவரும், ரவியும், ஸூர்யரும், ரக்ஷகரும் பகலைச் செய்பவரும், பகலைப் பிரகாசமாக்குகிறவரும் ஸப்த என்ற குதிரையையுடையவரும் பிரகாசமான கிரணமுள்ளவரும் மிக்க ப்ரீதியை உண்டுபண்ணுகிறவரும் விரைவாகச் செல்லுகிறவரும் இருளைப் போக்குகிறவரும், பச்சை நிறமுள்ள குதிரையை உடையவருமாகச் சொல்லப்படுகிறீர். ஸப்தமியிலோ அல்லது ஷஷ்டியிலோ எவன் வெறுப்பும் அஹங்காரமுமில்லாதவனாகிப் பக்தியுடன் (உம்மைப்) பூஜை செய்கிறானோ அந்த மனிதனை லக்ஷ்மி அடைகிறாள். எவர்கள் பூஜாகாலத்தில் வேறிடத்தில் மனத்தைச் செலுத்தாமல் உம்முடைய பூஜையையும் நமஸ்காரத்தையும் செய்கிறார்களோ அவர்களுக்கு ஆபத்துக்களும், மனோவியாதிகளும் உண்டாகாது. உம்முடைய த்யானத்தில் பிரியமுள்ளவர்கள் எல்லா வியாதிகளாலும் விடுபட்டவர்களும் எல்லாப் பாவங்களாலும் விடுபட்டவர்களும், ஸுகமுள்ளவர்களும், வெகுகாலம் ஜீவிக்கின்றவர்களும் ஆகிறார்கள்.

ஓ! அன்னபதியான ஸூர்யரே! விருப்பங்களை நிறைவேற்ற முடியாத நிலையிருப்பவனும் சிரத்தையுடன் எல்லோருக்கும் அதிதிபூஜை செய்ய விருப்பமுள்ளவனுமாயிருக்கிற எனக்கு நீர் அதிகமாக அன்னத்தைக் கொடுக்க வேண்டும். உம்முடைய பாதமூலத்தை அடுத்தவர்களும் மின்னல் இடிகளை உண்டுபண்ணுகிறவர்களும் உம்மைத் தொடர்ந்து வருபவர்களுமான மாடரன், அருணன், தண்டன் முதலிய எல்லாப் பக்தர்களையும் தனித்தனி ஆக நமஸ்கரிக்கிறேன். (நிக்கிரகம் செய்யும்) க்ஷுபையென்னும் தேவதையுடன் கூடிய (அனுக்கிரகம் செய்யும்) மைத்ரியென்னும் தேவதை, மற்றுமுள்ள பூதமாதாக்கள் ஆகிய அவர்கள் யாவரையும் நமஸ்கரிக்கிறேன். சரணாகதனான என்னைக் காப்பாற்றுக என்றார்.

(தொடரும்)

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## ப்ரஹ்லாத சரித்திரம்

ஸ்ரீமத் பாகவத சுலோகங்கள் அடிப்படையில்

18. அந்த ஹிரண்யகசிபுக்கு ஹ்லாதன், ஆஹ்லாதன், அனுஹ்லாதன், ப்ரஹலாதன் என்கிற நான்கு அற்புதமான புத்ரர்கள் பிறந்தார்கள். அவர்களில் ப்ரஹ்லாதன் உயர் குணங்களைக் கொண்டிருந்ததால் உயர்ந்தவனாக விளங்கினான்.

19. ப்ரஹ்மண்ய (பிரம்ம சிந்தனை) குணங்களின் நிறைவு; வாய்மையாளன், புலனடக்கம் உள்ளவன், எல்லோரிடமும் ப்ரியமானவன் என ப்ரஹ்லாதன் விளங்கினான்.

20. இறையடியார்களின் திருவடியில் அடியனாய் இருப்பது, எளியவரிடம் தந்தை போல் பாசம் காட்டுவது, நண்பர்களிடம் சகோதரபாசம் குரு (ஆசார்யனிடம்) இறையுணர்வு, பிறவி மூடர்களுக்கு கல்வி ரூபமாக விளங்கி பெருமை (கர்வம்) இல்லாதவனாக இருந்தான்.

21. சில ஸமயங்களில் வைகுண்டவாஸ அனுபவம் எப்படியிருக்கும் (நித்யஸுரிகள் அனுபவம்) என்று எண்ணி ஐயோ அந்த பகவதனுபவம் கிடைக்கப் பெற்றிலனே என்று அழுவான். சில ஸமயங்களில் உலகியல் சிந்தனைகளை விட்டு எம்பெருமானை நினைக்க முடிந்ததே என்று சிரிப்பான்.

22. சில ஸமயங்களில் வெட்கத்தை விட்டு ஆடுவான். சில ஸமயம் பாவனை நிலையில் அவன் மயமாகவே நடிப்பான்.

குறிப்பு : இது ஒரு அநுபூதிநிலை. அவ்வளவு எளிதில் வருவதில்லை. அந்த நிலை வந்துவிட்டால் இந்த உலகமே மறந்து விடும். தன்னை மறந்து ஆடவும், பாடவும் செய்யும். இதைக் கண்ணுறுபவர்கள் பித்தன், பேயன் என்றெல்லாம் சொல்வார்கள்.

இந்தச் சிறுவனை பாடசாலை (அக்காலத்தில் குருகுலம்) அனுப்பி கல்வி கற்கச் செய்தான். சிறிது காலம் கழித்து மகனை வரும்படி அழைத்து

23. **ஹிரண்ய கசிபு :** அப்பா, குழந்தாய் இத்தனை காலம் முயன்று கற்பிக்கப்பட்ட பாடத்தில் ஸாரமாக சொல்லப்பட்டவைகளைச் சொல்லு.

24. **பிரஹ்லாதன் :** தந்தையே, உங்கள் ஆணைப்படி நான் கற்ற ஸாரமான செய்தியைச் சொல்கிறேன். என் உள்ளத்தில் உள்ளதை, ஒருநிலைப்படுத்திய மனதோடு கேட்பீராக ! ஆரம்பம், இடை, முடிவு, பிறப்பு, வளர்ப்பு, இவை கடந்த, எல்லா காரணங்களுக்கும் காரணமான, ஆத்மாவின் மகிழ்ச்சி ரூபமான பகவானை வணங்குகிறேன்.

25. **ஹிரண்ய கசிபு :** ஹே ! பிராமணர்களே ! இது என்ன எதிரிகளின் துதியோடு கூடிய, ஸாரமற்ற செய்தியை, என்னை அறியாமல் கெடுமதியாளர்களே பையன் உங்களால் பெற்றிருக்கிறான்.

26. **ஆசார்யர்கள் :** அஸுரர் தலைவா எங்கள் மீது கோபங்கொள்ள வேண்டாம். எங்களுடைய உபதேசத்தால் உண்டான செய்தியை உங்கள் மகன் சொல்லவில்லை. வேறு யாரோ....

27. **ப்ரஹ்லாதன் நிலைப் பார்த்து அச்சம் கொண்ட ஹிரண்ய கசிபு :**

என்னால் சொல்லப்பட்டதல்ல என்று உன் குரு சொல்கிறார் பிரஹ்லாதா! அப்படியானால் எவரால் இப்படிப்பட்ட பாடம் கற்பிக்கப்பட்டது. யார் கற்றுக் கொடுத்தவன்.

28. **பிரஹ்லாதன் :** அடியேனுக்கு ஸ்ரீ ஆசார்யனாய் இருந்து அறிவித்தவன், இவ்வுலகின் கண் உள்ள எல்லா ஜீவன்களின் இதயத்தில் இருக்கின்ற அந்த மெய்ப்பொருள் பரமாத்மாதான். அவனைத்தவிர வேறு யார்?

குறிப்பு : இவ்வுலகின் நிலையான முதல் ஆசார்யன் ஸ்ரீய : பதியான நாராயணன், இரண்டாவது ஆசிரியனாக இயற்கை, அதாவது பஞ்ச பூதங்கள்.

29. **ஹிரண்ய கசிபு :** அறிவிலியே ! அடிக்கடி அடிக்கடி சொல்கிறாயே யார் அந்த விஷ்ணு. உலகறிந்த ஈச்வரனாய் உன்முன் புகழோடு நிற்கின்ற என்னைவிட யாரடா ஈச்வரன்.

30. **பிரஹ்லாதன் :** ஈச்வரன் என்பது வெறும் வார்த்தை மட்டும் அல்ல. யோகிகள் ஸதா ஸர்வ காலமும் த்யானம் செய்கின்ற ஒருவன். உலகன் அவன். ஸத்யம் அவன். அவன் தான் எல்லாவற்றிற்கும் தலைவனான விஷ்ணு பகவான்.

31. **ஹிரண்ய கசிபு :** அறிவிலியே ! பரமேச்வரனை அறிவாயா! நான் இருக்கும் போது வேறு ஈச்வரன் யார்? இறப்பை நோக்கி இருக்கும் நீ அதனால் தான் அப்படி ஈச்வரன் விஷ்ணு என்ற அடிக்கடி சொல்கிறாய்.

(தொடரும்)

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 4

பி. ஆர். கண்ணன்

## சுகர் வரலாறு



ஸ்ரீ தேவி பாகவதத்திலும், மகாபாரதத்திலும் வேதவியாஸ பகவானின் புத்திரரான சுகரின் கதை சொல்லப்பட்டுள்ளது. விவரங்கள் ஸ்ரீமத்பாகவதத்திலிருந்து சிறிது மாறுபட்டுள்ளன. இதுபோன்ற வித்தியாசங்கள் பரீக்ஷித்தின் கடைசிகதி, வ்ருத்திராசுரன் பாத்திரம் முதலிய கதாபாகங்களிலும் காணக் கிடைக்கின்றன. எல்லா புராணங்களும், மகாபாரத இதிஹாசமும் ஒரே வேதவியாஸரே இயற்றியுள்ளபோது, அவையெல்லாமே ஸத்தியமே. மாறுபாடுகள் தோன்றக் காரணம், இக்கதைகள் எல்லாம் பல்வேறு யுகங்களில் திரும்பத் திரும்ப நடைபெறுகின்றன. அம்பாளின் லீலையாக சில மாறுதல்களுடன் வேறுவேறு யுகங்களில் ஒரே கதைகள் பூமியில் அரங்கேறுகின்றன. அவ்வளவே. லீலாவிநோதங்கள் அம்பாளின் இச்சையான பல்வேறு விளையாட்டுகளாக மனதில் பக்தியை வேரூன்றச் செய்யவேண்டுமேயன்றி, வாதப்பிரதிவாதங்களில் திளைப்பதற்கல்ல.

பரமவிரக்தரான வியாஸருக்கு ஒருசமயம் ஸரஸ்வதி நதிதீரத்தில் ஒரு குருவிக் குடும்பத்தைப் பார்க்கையில், தனக்கு புத்திரன் இல்லையே என்ற ஏக்கம் மேலிட்டது. குருவிகள் போலல்லாமல், மனுஷ்யபுத்திரன், விவாகம் செய்துகொண்டு, வாழ்க்கை முழுவதும் மாதாபிதா ஸம்ரக்ஷணை செய்து, அவர்கள் காலகதி அடைந்தபின், அபரகாரியங்கள் (தகனம், 10 நாள் நித்தியவிதி, அஸ்தி ஸஞ்சயனம், வ்ருஷோத்ஸர்கம்,

ஸபிண்டீகரணம், மாஸ்யம், ஸோதகும்பம் உள்பட), கயாஸ்ராத்தம் எல்லாம் செய்து அவர்களைத் திருப்திப்படுத்துவானே, அப்பேர்ப்பட்ட புத்திரன் தனக்கில்லையே, ஸத்கதிக்கு புத்திரன் அவசியமாயிற்றே என்று வருந்தினார். நாரதர் உபதேசப்படி, வியாஸர் உடனேயே மேருமலையில் அம்பாளின் வாக்பீஜ மந்திரத்தை (ஐம்) உச்சரித்து 100 வருஷ காலம் தபஸ் செய்தார். கடுந்தபஸினால் தன் பதவிக்கு ஆபத்து நேருமோ என்று பயந்துபோன இந்திரனைச் சமாதானப்படுத்தி, பரமேஸ்வரன் பார்வதியுடன் வியாஸருக்கு தரிசனம் தந்து, வரன் அருளினார்: ஸர்வதேஜோமயீ ஜ்ஞாநீ கீர்திகர்த்தா தவாநகஃ ந அகிலஸ்ய ஜநஸ்யாத்ர வல்லபஸ்தே ஸுதஃ ஸதாநந 'உனக்குப் பிறக்கும் புத்திரன் அதீத தேஜஸ் கொண்ட ஞானியாகவும், பரிசுத்தனாகவும், உன் கீர்த்தியை வளப்படுத்துபவனாகவும், ஸகல ஜனங்களுடைய பிரீதிக்குப் பாத்திரனாகவும் திகழ்வான்' என்று. பின்னர், கிருதாசி என்ற அப்ஸரஸ் ஆகாசமார்க்கமாக வரக்கண்டு, மனம் ஒருகணம் பேதலித்த வியாஸர், புரூரவஸ் கதையை நினைவு கூர்ந்து மனச்சமாதானம் அடைந்தார். வைவஸ்வத மனுவின் புத்திரன் ஸுத்யும்னன் ஒருசமயம் சிவனால் தடைசெய்யப்பட்ட வனத்தில் புகுந்து, இலா என்கிற தன் பழைய ஸ்திரீ வடிவத்தை அடைந்து, புதனுடன் இணைந்து, அவர்களுக்குப் புத்திரனாகப்பிறந்தவன் புரூரவஸ். ஊர்வசி என்ற அப்ஸரஸ் பூமியில் வந்தபோது, அவளிடம் மனதைப்பறி கொடுத்த புரூரவஸ், அவள் ஒருவருஷத்திற்குப்பிறகு ஸ்வர்க்கம் திரும்பியபோது, பிரிவு தாங்காமல் பைத்தியமாகவே மாறியதை வியாஸர் நினைத்தார். அப்ஸரஸை விவாகம் செய்யும் எண்ணத்தை விட்டார். வியாஸரைக் கண்டு பயந்து போன கிருதாசி, கிளி உருவத்தை எடுத்துக்கொண்டு, பறந்து அகன்றாள். உடனேயே வியாஸர் ஹோமஅக்கினிக்காக அரணிக்கட்டையைக் கடையும்போது, சுகர் அந்த அக்கினியிலிருந்து தோன்றினார். அக்கினியைப் போலவே அதீத தேஜஸுடன் காட்சியளித்தார் சுகர். கங்கை தானகவே வந்து, கங்கா ஸ்னானம் ஆயிற்று. ஜாதகர்மாதிகள் செய்தார் வியாஸர். சுகர் உடனேயே சிறுவனாக வளர, உபநயனம் செய்வித்தார் வியாஸர். ஆகாசத்திலிருந்து தண்டம், கிருஷ்ணாஜினம் (மான்தோல்), கமண்டலு எல்லாம் தானாகவே வந்தடைந்தன. மகாபாரதத்தில், சிவன் பார்வதியுடன் தானே நேரில் வந்து, உபநயனம் செய்வித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. வியாஸர் பிறந்தவுடனேயே எவ்வாறு ஸகலவேதசாஸ்திரங்களும் அவரை வந்தடைந்தனவோ, அவ்வாறே உபநயனத்தின்போதே சுகரையும் ஸகல வித்தியைகளும் தானாகவே வந்து சேர்ந்தன. இருந்தாலும், நியமப்படி, வியாஸர் ப்ருஹஸ்பதி பகவானிடம் குருகுலவித்தை பயில அவரை அனுப்பவே, சுகரும் சிறிதுகாலம் குருகுலத்தில்

*தங்கிவிட்டு, ஸமாவர்த்தனம் முடிந்து வியாஸரிடம் திரும்பினார். வியாஸர் பின்னர் சுகரிடம் விவாகப் பேச்சை ஆரம்பித்தார். பரமஞானியான சுகரிடம் அந்தப்பேச்சு எடுபடவில்லை. பிதாவுக்கும், புத்திரனுக்கும் கடுமையான வாத விவாதங்கள் நடந்தன. சுகரின் வாதம்: 'பந்தத்தில் பிடித்து வைத்துக் கொள்வதால், கிருகத்திற்கு அப்பெயர் வந்தது. அதிதுர்லபமான மனுஷ்யப்பிறவி கிடைக்கப் பெற்று, வேதசாஸ்திரங்களைக் கற்றபின், ஸம்ஸாரத்தில் கிருகஸ்த நிலையில் சிக்காமல் ஞானத்தையே தேடவேண்டும். ஸம்ஸாரம் எல்லா துக்கங்களுக்கும் காரணம். மேலும் கிருகஸ்தன் ஸ்வதந்திரனல்ல, தன் வாழ்விற்கு பிறரை நம்பி இருக்கிறான்' என்று. வியாஸரின் பதில்: 'நான்கு ஆசிரமங்களுள், கிருகஸ்தாசிரமமே ஸர்வஸ்ரேஷ்டம் என்று சாஸ்திரங்கள் போதிக்கின்றன. இந்திரியங்கள் அதீத பலம் மிக்கவை. ஆசிரம வரிசைக்கிரமப்படி படிப்படியாகச் சென்று ஞானஸித்தியைப் பெற வேண்டும். அதுதான் நல்லது. வஸிஷ்டாதி ஞானிகள் கிருகஸ்தர்களாகவே இருந்தனர்' என்று. ஸ்ரீமத் ராமாயணத்திலும் 'சதுர்ணாமாஸ்ரமாணாம் ஹி கார்ஹஸ்த்யம் ச்ரேஷ்டமுச்யதேந' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனுஸ்மிருதியிலும் அவ்வாறே. காரணம், மற்ற மூன்று ஆசிரமஸ்தர்களும் (பிரம்மசாரி, வானப்பிரஸ்தன், ஸந்நியாஸி) தங்கள் ஆகாரத்திற்கே கிருஹஸ்தனைத்தானே நம்ப வேண்டியிருக்கிறது. பரமஞானியான, வேதாந்தகர்த்தவான வியாஸரே மாயைக்கு வசப்பட்டு இவ்வாறு பேசுகிறார் என்று புலம்பி வருந்திய சுகர் தேவியிடம் சரண் புகுந்தார். வியாஸரோ, கடலில் மூழ்கிய படகில் தன் பொருட்களை இழந்த வணிகனைப் போல் துன்பத்தில் மூழ்கினார். பின்னர், வியாஸர் தேவி பாகவதத்தை சுகருக்கு போதித்து, அவரை அத்தியயனம் செய்யச் சொன்னார்.*

*(வளரும்)*


# மாசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 16/02/2020 | ஞாயிறு | அனுஷம் தேர் - பாராயணம் |
| 16/02/2020 | ஞாயிறு | கலவை பராத்பரகுரு 66வது பீடாதிபதி பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை |
| 18/02/2020 | செவ்வாய் | மூலம் தேர் |
| 19/02/2020 | புதன் | ஏகாதசி |
| 20/02/2020 | வியாழன் | துவாதசி, ப்ரதோஷ பூஜை |
| 20/02/2020 | வியாழன் | உத்ராடம் தேர் - பாராயணம் |
| 21/02/2020 | வெள்ளி | மஹா சிவராத்ரி, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் ஜயந்தி |
| 22/02/2020 | சனி | அவிட்டம் தேர் |
| 23/02/2020 | ஞாயிறு | அவிட்டம் பாராயணம் |
| 24/02/2020 | திங்கள் | கலவை பரமேஷ்டிகுரு 67வது பீடாதிபதி பூஜ்யஸ்ரீ மஹா தேவேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை |
| 06/03/2020 | வெள்ளி | ஏகாதசி |
| 07/03/2020 | சனி | துவாதசி - ப்ரதோஷ பூஜை |
| 07/03/2020 | சனி | குரு ஆராதனை ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தின் 69வது பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகளின் வார்ஷிக ஆராதனை |
| 08/03/2020 | ஞாயிறு | மாசி மகம் |
| 09/03/2020 | திங்கள் | பௌர்ணமி பூஜை |
| 14/02/2020, 21/02/2020, 28/02/2020, 06/03/2020 - 13/03/2020 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 21

## ஆந்த்ரப்ரபா ஆசிரியர் நீலம் சஞ்சீவி

நானும் என் மனைவியும் பூஜை புனஸ்காரங்கள் வைத்துக்கொண்டு எங்களால் முடிந்த அளவுக்கு வழிபாடு செய்து வந்தோம். ஒரு நல்ல குரு எங்களுக்கு கிடைக்கவில்லையே என்று நெடு நாளாக ஏக்கம்.



என் நண்பர்கள் சிலரை சிபாரிசு செய்தனர். எனக்கு அவர்கள் மீது நாட்டம் எற்படவில்லை. குரு தானாகவே அமைவார் அதுவும் அவர்அருள்தான் என்று பேசாமல் இருந்துவிட்டேன்.

ஒரு சமயம் காஞ்சீ வரதராஜரை ஸேவிக்கச் சென்றோம். அவரது தர்சனம் முடிந்தபின் அங்கு ஒரு தெருவில் பெரியவா இருப்பதாக அறிந்து அந்த மடத்துக்குள் சென்றோம். அமைதியான சூழ்நிலை. பெரியவா பூஜை செய்து கொண்டிருந்தார். மின்சார விளக்குகள் எதுவும் இல்லை. வேத கோஷங்களுடன் ஸ்ரத்தையாய் பூஜை நடந்து கொண்டிருந்தது.

இதற்கு முன் அவரைப் பார்த்தது கிடையாது. ஹிந்து பத்ரிகையில் அவர் செய்த உபன்யாஸங்களைப் படித்துள்ளேன். எளிமையான அதே சமயம் ஆழமான உபதேசங்கள் படிப்பவர்களை தன்பால் ஈர்க்கும் தன்மை கொண்டவை. பூஜை முடிந்தபின் அம்மகான் வந்திருக்கும் பக்தர்களைப் பார்த்தார். நானுமவர் பார்வையில் விழுந்திருப்பேன். என்ன பார்வை. மின்னல் போல் பார்வை. சௌம்யமான பார்வை. மனதில் ஏதோ நெருடியது. இந்நிகழ்ச்சி நடந்து பல மாதங்களுக்குப் பின் காஞ்சீபுரம் மீண்டும் செல்ல நேர்ந்தது. அவருடைய மடத்துக்குச் சென்று தர்சனத்திற்காக காத்துக்

கொண்டிருந்தோம். அவரது சிஷ்யர் ''வெயிட் பண்ணுங்கோ கொஞ்ச நாழியாகுமென்றார்'' நாங்கள் எங்கள் விவரங்களை ஒரு சீட்டில் எழுதி அவரிடம் தந்தோம். சிறிது நேரத்தில் பரபரப்பு. தண்டம் ஏந்தி ஞ்யான பிழம்பாய் பெரியவா வந்தார். என்னை அழைத்தார்.

'நீ ப்ராம்மணன் ஆனால் க்ஷத்ரிய கோத்ரமோ'' என்றார் . அவர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லச் சொல்ல அவரது அருகில் போவதை உணர்ந்தேன். குருவின் அருளாலேயே எனக்கு குரு கிடைத்து விட்டார். நித்ய பூஜை மட நிர்வாகம் இதன் நடுவில் ராஜ நீதி செய்யும் ஸாமர்த்யம் இதெல்லம் எப்படி ஸாத்யம் என்று ஆச்சரயப்பட்டேன். அப்போது வித்யாரணயரின் ஸ்லோகம் நினைவுக்கு வந்தது. ஆசாரம் தவம் இவைகளை உடையவர்களுக்கு எல்லாம் ஸாத்யமே'' அப்பேற்பட்டவர் எனக்கு குருவானார். நான் நிறைந்தேன்.

## ஸனாதன தர்மப்புதிர்கள் ஜனவரி விடைகள்

1. திருவெற்றியூர்
2. திருவிடந்தை
3. மஹா பாஷ்யத்தின் ஒரு பகுதி
4. துர்கா ஸப்த ஸதீ
5. ஏழு
6. ப்ரம்மபுத்ரா
7. காவிரி பூம்பட்டினம்
8. ஐயம்
9. சிதம்பரம்
10. அப்பய்ய தீக்ஷிதர்

## ஸனாதன தர்மப்புதிர்கள் பிப்ரவரி வினாக்கள்

1. ஸ்ரீசங்கரரின் வண்டு ஸ்தோத்ரம்
2. கோயில் ப்ராகாரங்கள் எம்முறையில் அமைந்திருக்கும்
3. வினாயகருக்கு எத்தனை ப்ரதக்ஷிணம்?
4. கீழ் ஏழு லோகங்கள் யாவை/
5. கோதாவரியின் உத்பத்திஸ்தானம்
6. வட்டப்பாறை அம்மன் உள்ள இடம்
7. சிவ நாமத்தை விளித்து ஸ்ரீதர ஐயாவாள் செய்த ஸ்தோத்ரம்
8. ஸ்ரீவித்யா தந்த்ரத்தை விளிபடுத்திய ரிஷிபத்னி
9. அம்மனின் சாயாபீடம் உள்ள இடம்
10. காஸ்யபரால் உருவாக்கப்பட்ட பாரதப் ப்ரதேசம்.

# வாழ்வின் நான்கு நிலைகள்

இராமாயணம்

## க்ருஹஸ்தன்

வாழ்க்கையின் இரண்டாவது நிலை இது. இதனை தமிழில் இல்லறத்தான் என்பர். இந்த ஆசிரமத்திற்கு கிருஹஸ்தாசிரமம் என்று பெயர்.

க்ருஹம் என்ற ஸம்ஸ்க்ருத சொல்லுக்கு வீடு என்றும், மனைவி என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது. அகராதியில் வீட்டில் மனைவி இல்லை எனில் அது வீடாக கருதப்பட மாட்டாது என்று ஸம்ஸ்க்ருதத்தில்

' ந க்ருஹமித்யாஹுர் க்ருஹிணீ

க்ருஹமுச்யதே ' என்று சொல்லப்பட்டது.

வீட்டு எஜமானனை க்ருஹபதி என்பர். இதற்கு தன்னுடைய வேத படிப்பை முடித்துக் கொண்டு திருமணம் செய்து கொண்டு வாழ்பவன் என்பதே இதன் பொருள்.

இன்றைய திருமணங்களில் காசியத்திரை என்றதொரு சடங்கு பழக்கத்தில் கையாளப்படுகிறது. படிப்பதற்குச் சென்று படித்து, முடித்து குருவின் உத்திரவின் பேரில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதைக் காட்டுவதே இந்த சடங்கு.

பிரம்மச்சாரி தனது விரதத்தை முடித்துக் கொண்டு நல்ல லக்ஷணங்கள் நிறைந்த பெண்ணை கைப்பிடித்து திருமணம் செய்து கொள்ள வேண்டும். மணமகனுக்கும், மணமகளுக்கும் குறைந்தது ஆறு ஆண்டுகளாவது வயது வித்தியாசம் இருத்தல் நலம். இதனை உத்தமம் என்பர். அதற்கு குறைந்த வயது விவாகம் மத்யமம் என்று கூறப்படுகிறது.

முறைப்படி திருமணம் செய்து கொண்டவன் தனக்கு விதிக்கப்பட்ட தொழிலினால் பொருள் ஈட்டி தனது சக்திக்கு ஏற்றவாறு வீட்டுச் சிலவுகளை செய்து குடும்பம் நடத்த வேண்டும்.

தன்னுடைய பித்ருக்களை சிராத்த, தர்ப்பணம் முதலியவற்றினாலும் தேவர்களை பூஜிப்பதாலும், ஹோமம் முதலியவற்றை செய்வதாலும், முன்அறிவிப்பின்றி வீடு தேடி வந்த அதிதி (விருந்தாளி)களை உணவளித்து கௌரவிப்பதாலும், ரிஷிகளை

*தான் கற்ற வேதங்களை மறக்காமல் தினமும் சிறிது காலமாவது சொல்லிக் கொண்டிருப்பதாலும், பிரம்மாவை புத்திர உற்பத்தியிலும், காகம் முதலியவற்றிற்கு அன்னம் கொடுப்பதினாலும், உலக மக்களிடம் அன்போடு இருப்பதாலும், மகிழ்ச்சி அடையச் செய்கிற கிருகஸ்தனே நல்ல உலகங்களை அடைகின்றான். தேவ, ரிஷி, பித்ரு, வீட்டு பூஜை, அதிதி ஆகியவர்களை அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்து முடித்த பிறகே உணவு உட்கொள்ள வேண்டும்.*

*சம்பளம் எதுவும் வாங்காமல் மாணவர்கட்கு வேதத்தை சொல்லிக் கொடுப்பது தான் பிரம்ம யக்ஞயம். தர்ப்பணம் செய்வது பித்ரு யக்ஞும், அதிதிகட்கு பூஜித்து அன்னமிடுவது மனுஷ்ய யக்ஞும். மேலே சொன்ன ஐந்தும் தவறாமல் தினமும் கடைபிடிப்பவனே கிருஹஸ்தன் ஆகிறான்.*

*வீட்டில் துடைப்பம் கொண்டு பெருக்குதல், முறம் கொண்டு புடைத்தல், நீர்குடம் வைத்திருத்தல், உரலில் உலக்கை கொண்டு குத்துதல், அடுப்பு வைத்திருக்கும் இடம் ஆகிய செயல்களைச் செய்யும் போது தன்னையறியாமல் புழு, பூச்சி முதலிய பிராணிகளை ஹிம்சிக்க நேரிடுவதால் 'ஸூனா' என்ற தோஷம் (குற்றம்) ஏற்படுகிறது. இந்த 'ஸூனா' தோஷம் ஐந்து வகையால் வீட்டில் ஏற்படும் என்கிறது அகராதி. (பஞ்ச ஸூனா க்ருஹஸ்தஸ் சுல்லீ பேஷண்யு பஸ்கார: கண்டினீ சோதகும் பஸ்ச)*

*இல்லறத்தான் தினமும் செய்ய வேண்டிய கடமைகள் அமாவாசை, கிரகணங்கள் போன்ற காலங்களில் செய்ய வேண்டிய கடமைகள் (நைமித்திகம்) புண்ணிய தீர்த்த யாத்திரை, காப்பாற்ற வேண்டியவர்களை கட்டாயம் காப்பாற்றுதல் ஆகியவற்றை குறைகள் இன்றி தவறாமல் செய்து வர நற்கதி அடைகிறான்.*

*ஒரு இல்லறத்தானால் நன்கு கவனிக்கப்பட வேண்டியவர்கள் கீழ்க்கண்டவர்கள் 1. தாய் தந்தையர், 2. குரு, 3. மனைவி, 4. குழந்தைகள், 5. எளியவர்களான உறவினர்கள், 6. விருந்தாளிகள், 7. பிரம்மச்சாரி, 8. ஸன்யாசி.*

*இங்கனம் இவர்களை எல்லாம் காப்பாற்றி வருவதால் தான் இந்த ஆசிரமத்தை 'உத்தம ஆசிரமம்' என்று கூறப்பட்டுள்ளது. திருவள்ளுவரும்*

*'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*

*நல்லாற்றினின்ற துணை' என்று பகர்ந்துள்ளார். (அதிகாரம் 5 குறள்)*

*(தொடரும்)*

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

## அசோக ஸுந்தரீ கதை

ஒரு ஸமயம் சிவபெருமானும் பார்வதியும் உலாப் போயிருந்தனர். ஓரழகிய நந்தவனத்திற்கு வந்தனர். எங்கும் புஷ்பித்த மரங்கள், பச்சைபசேரென்றிருக்கும் செடி கொடிகள், ஸ்படிகம் போல் இருக்கும் நீர் நிரம்பிய குளங்கள், நறுமணம் கமிழும் கானனம். இப்படிப்பட்ட வனத்தைப் பார்த்ததும் பார்வதி சொக்கிப் போனாள். அவர்களிருவரும் ஒரு மரத்தின் கீழ் இளைப்பாறும் போது அவள் இது என்னமரம் என்று கேட்க சிவன் இதுதான் ''கல்பக வ்ருக்ஷம்''. விஷ்ணு எப்படி தேவர்களில் முதல்வரோ, நதிகளில் கங்கை எப்படியோ, இது மரங்களில் முதன்மையானது. தேவ, தானவ, கந்தர்வர் என்று யார் என்ன கேட்டாலும் அதைத்தரும் தரு இது என்றார். பார்வதி தேவியும் அவரிடம் உத்தரவு வாங்கி கொண்டு ஒரு வனிதையை நினைத்தாள்.

அம்மாத்ரத்திலேயே அவர்கள் முன் அதி ஸௌந்தர்யமான பெண் தோன்றி ''என்னை எதற்குப் படைத்தீர்'' என்று வினவ ''நீ என் விருப்பப்படி உண்டானாய். உன் பெயர் அசோகஸுந்தரீ. ஆயுவின் மகனான நஹுஷன் உன்னை மணப்பான். என் ஆசீர்வாதங்கள்'' என்று பார்வதி உரைத்தாள். அது முதல் அசோகஸுந்தரியும் அங்கே அந்த வனத்திலேயே தன் வாழ்க்கையை நடத்தி வந்தாள்.

இச்சமயத்தில் தானவத் தலைவன் ஹுண்டன் என்பவன் அவ்வனத்தில் இருக்கும் அவளைப் பார்த்தான். அவள் அழகில் மயங்கி என்னை மணம் முடி பெண்ணே என்றான். இதைக்கேட்டு நகைத்து நான் ஏற்கனவே பார்வதி தேவியின் உத்தரவில் நஹுஷ மகராஜனை மணம்புரிய இருக்கிறேன் என்று கூற ஹுண்டன் நகைத்து நகுஷன் இன்னும் பிறக்கவே இல்லை, அதற்குள் உன் இளமை வாடிவிடும். எனவே என்னை மணம்புரி என்று கூற அவள் அவனை விரட்டினாள். அவள் அழகில் மயக்கமுற்ற ஹுண்டன் எப்படியாவது அவளை அடைய ஒரு யுக்தி செய்தான்.

தன் மாயயினால் ஒரு அழகிய பெண்ணாக மாறி அவளிடம் வந்தான். ''தோழி என்னுடைய கணவன் ஹுண்டனெனும் தானவனால் கொல்லப்பட்டார். அவனைக் கொல்லக் கூடிய கணவனை அடைய நான் தவம் செய்யப் போகிறேன். நீயும் நல்ல

கணவனுக்காகக் காத்திருக்கிறாய், நாமிருவரும் ஒரே இடத்தில் தவம் செய்வோம் வா'' என்றழைக்க அவளும் அப்பெண்ணுடன் கான்சனம் எனுமிடத்திற்கு சென்றார்கள். இது என்னவிடம் என்று அசோக ஸுந்த்ரி கேட்க ஹுண்டன் தன் நிஜ ஸ்வரூபத்தைக் காட்டினான். மீண்டும் தன்னை மணம்புரிய மன்றாடினான்.

மகத்தான கோபம் கொண்ட அசோகஸுந்தரி நஹுஷந்தான் என் கணவன், அவனாலேயே உனக்கு மரணம் என்றுகூறி நஹுஷனை மணம்புரியும் வரை வேறு ஆடவனை பார்க்க மாட்டேன்'' என்று சபதம் செய்து கங்கைக் கரையில் கடுமையான தவமியிற்றத் தொடங்கினாள். அங்கும் ஹுண்டன் அவளை விடவில்லை. நஹுஷணை தான் கொன்று அவன் மாம்சத்தைச் சாப்பிட்டதாக கூறி அவளை அச்சப்படுத்தினான். ஆனால் அவள் நம்பவில்லை. தன் தவத்தைத் தொடர்ந்தாள். வித்வரா எனும் கின்னரப்பெண் அவளிடம் நஹுஷன் உயிருடனிருப்பதாகக் கூறினாள்.

நஹுஷனும் பிறந்து வளர்ந்து ஹுண்டனை பெரும்போரில் மாய்க்க இதை ரம்பை எனும் அப்சரஸ் அசோக ஸுந்தரியிடம் கூறினாள். அதன் பின்னரே தன் தவத்தை முடித்து வசிஷ்டரின் ஆஸ்ரமத்தில் இருந்த நஹுஷன் மீது தன் பார்வையை செலுத்தினாள். அவனும் அவளைப் பார்க்க இருவரும் மணம் முடிக்க சம்மதம் புரிந்தனர். வசிஷ்டரும் அவர்களுடைய மணத்தை முடித்து வைத்தார். தனக்கு வரம் தந்த பார்வதிதேவியை மனதாற தொழுது நஹுஷனை அசோகஸுந்தரி திருமணம் செய்து கொண்டாள். அவளுடைய பார்வதி தேவியின் ஏகாக்ரசிந்தை வெற்றியைக் கொடுத்தது.

(பாத்ம புராணம்)

# EKA DHINA KOTI GAYATHRI JAPAM



**With the blessings of Sri Acharyas, Jagadguru**
**Sri Sankara Baghawat Padhal Panchami Seva Trust**
**and**
**"Sri Sankara TV" Invite all Andanars to participate in the**
***"Eka Dhina Koti Gayathri Japam"*, to pray for the wellbeing of humanity.**

**Date: 1-May-2020**

**Venue: Valluvar Gurukulam Higher Secondary School, West Tambaram, Chennai - 45**

**Commencing Time: 5:30 A.M to 8:30 A.M Prasadam: 12:30 PM onwards**

Please register with your ***Name, Age, Gothram, contact number*** by **SMS / Whatsapp** to

**6382308117 / 6382152792/ 7358210965**

# மஹிஷாஸுரமர்தினி ஸ்தோத்ரம்

अयि जगदम्ब मदम्ब कदम्बवनप्रिय वासिनि हासरते
शिखरि शिरोमणि तुङ्गहिमालय शृङ्गनिजालय मध्यगते ।
मधुमधुरे मधुकैटभ गञ्जिनि कैटभभञ्जिनि रासरते
जय जय हे महिषासुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। ३।।

**அயி ஜகதம்ப மதம்ப கதம்ப வனப்ரியவாசினி ஹாஸரதே**
**சிகரிசிரோமணி துங்க ஹிமாலய ஸ்ருங்கனிஜாலய மத்யகதே**
**மடுமதுரே மதுகைடப பஞ்சினி கைடபபஞ்சினி ராஸரதே**
**ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்தினி ரம்யகபர்தினி சைலசுதே**

*உலகின் அன்னையே என் தாயே கதம்பவனத்தில் வசிப்பதை விரும்புவளே சிரிப்பில் மகிழ்பவளே மலைகளில் சிறந்த இமாலய உச்சியில் ஆலயத்தில் இருப்பவளே தேன் போல் இனியவளே, மது கைடபர்களை அழித்தவளே,கேளிக்கைகளில் மகிழ்பவளே, மகிஷாஸுரனை அழித்தவளே, அழகிய கபர்தினி, மலைமகளே உனக்கு ஜயம் ஜயம்.*

अयि शतखण्डविखण्डितरुण्डवितुण्डित शुण्डगजाधिपते
रिपुगजगण्डविदारणचण्ड पराक्रमशुण्डमृगाधिपते ।
निजभुजदण्डनिपातितखण्डविपातितमुण्डभटाधिपते
जय जय हे महिषासुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। ४।।

**அயி சதகண்ட விகண்டிதருண்ட விதுண்டித சுண்ட கஜாதிபதே**
**ரிபுகஜகண்டவிதாரனசண்ட பராக்ரமசுண்ட ம்ருகாதிபதே**
**நிஜபுஜதண்ட நிபாதிதகண்ட விபாதிதமுண்டபடாதிபதே**
**ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்தினி ரம்யகபர்தினி சைலஸுதே.**

*சதகண்டம் எனும் ஆயுதத்தால் முண்டாஸுரனை வீழ்த்தியவளே கஜாசுரனின் தும்பிக்கையை துண்டித்தவளே எதிரிகளான யானை களின் கழுத்தைத் துண்டித்து எறிவதில் திறமை உள்ளவளே தண்டாயுதம் போன்ற தன் தோள்களின் வலிமையால் முண்டாஸுரனின் ஸேனாதி பதியைக் கனடதுண்டமாக வெட்டியவளே மஹிஷாசுரனை மாய்த்தவளே அழகிய கபர்தினி உனக்கு ஜயம் ஜயம்.*

## மகாகவி

# காளிதாஸரின் ப்ரம்ம துதி

**இளம்பூரணர்**

**जगत्योनिरयोनिस्त्वम् जगदन्तो निरन्तक ।**

**जगदादिरानादिश्त्वम् जगदीसो निरीश्वरः ।।**

***ஜகத்யோனிரயோனிஸ்த்வம் ஜகதந்தோ நிரந்தக:***

***ஜகதாதிரனாதிஸ்த்வம் ஜகதீசோ நிரீஸ்வர:***

*தாங்கள் உலகுக்குக் காரணமாயிருப்பவர், உமக்கு ஒரு காரணமில்லை. உலகுக்கு அழிவைத் தருபவர், ஆனால் உமக்கு அழிவில்லை. உலகுக்கு முன்னுள்ளவர். ஆனால் ஆதியற்றவர். உலகுக்குத் தலைவர் தாங்கள், உமக்குத் தலைவரில்லை.*

**आत्मानमात्मना वेत्ति स्रुजश्यात्मानमात्मना ।**

**आत्माना क्रुतिना च त्वमात्मन्येव प्रलीयते ।।**

***ஆத்மானமாத்மனா வேத்ஸி ஸ்ருஜஸி ஆத்மானமாத்மனா ।***
***ஆத்மனா க்ருதினா ச த்வத்மன்யேவ ப்ரலீயஸே ।।***

*உமது ஸ்வரூபத்தை தாமே அறிகின்றீர். தம்மைத் தம்மை கொண்டே படைத்து கொள்கிறீர். காத்தல் எனும் கார்யத்தைச் செய்து தம்மைக் கொண்டே தம்மிடத்தில் மறைகிறீர்.*

**द्रवस्शन्घातकटिन स्तूलशुश्मो लकुर्कुरु ।**

**व्यक्तो अव्यक्तेतरच्चासि प्राकाम्यम् ते विभुतिषु ।।**

***த்ரவஸங்காதகடின; ஸ்தூலஸூக்ஷ்மோ லகுர்குரு:***

***வ்யக்தோ அவ்யக்தேதரச்சாஸி ப்ராகாம்யம் தே விபூதிஷு ।।***

*த்ரவம் அடர்த்தியால் கடினப்பொருள், பருப்பொருள், நுண்பொருள் புலப்படுவது, புலப்படாதது ஆகிய எல்லாமாக இருக்கிறீர். இவ்வுலகச் சக்திகளில் உமக்குத் தடையற்ற உரிமை உள்ளது.*

**उद्घातः प्रणवो यासाम् न्यायैस्त्रिभिरुदीरणम् ।**

**कर्म यन्य; फ्लम् स्वर्ग; तासाम् त्वम् प्रभवो गिराम् ।**

***உத்காத: ப்ரணவோ யாஸாம் ந்யாயைஸ்த்ரிபிருதீரணம்***

***கர்ம யஞ்ய:பலம் ஸ்வர்க: தாஸாம் த்வம் ப்ரபவோ கிராம் ।।***

*எந்த வேதங்களுக்குத் தொடக்கமாக ப்ரணவம் உள்ளதோ மூன்று ஸ்வரங்களால் வேதம் ஒலிக்கப்படுகிறதோ, எந்த வேதத்தால் கர்மம் விளங்குகிறதோ, யாகமோ, பலனோ ஸ்வர்கமோ அத்தகைய வேதங்களுக்கு தோன்றுமிடமாய் இருக்கிறீர்.*

**त्वामामनन्ति प्रक्रुतिम् पुरुषार्त प्रवर्तिनीम् ।**

**तद्दर्शिनम्दासीनम् त्वामेव पुरुषम् विदु; ।।**

***த்வாம் ஆமனந்தி ப்ரக்ருதீம் புருஷார்த்ப்ப்ரவர்தினீம்***

***தத்தர்சினம் உதாஸீனம் த்வாமேவ புருஷம் விது: ।।***

*உம்மை ஜீவர்களுக்கு சுகங்களை உண்டு பண்ணும் ப்ரக்ருதியாக சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. உம்மையே அப்ப்ரக்ருதியை காண்பவராகவும், உதாஸீனமாயிருக்கும் ஜீவனாகவும் சொல்கின்றன.*

**त्वम् पित्रूणामपि पिता देवानामपि देवता ।।**

**परतोपि परश्चासि विधाता वेह्द्सामपि ।**

***த்வம் பித்ருணாமபி பிதா தேவானாமபி தேவதா***

***பரதோபி பரஸ்சாஸி விதாதா வேதஸாமபி ।।***

*தேவரீர் பித்ருக்களுக்கு பூஜனீய பிதா,தேவர்களுக்குத் தேவர், உயர்ந்த பொருள்கள் யாவற்றிற்கும் மேலானவர், மரீசி முதலானவர்களையும் படைத்தவராயிருக்கிறீர்.*

**त्वमेव हव्यम् होता च भोज्यम् भोक्ता च शाश्वत: ।।**

**वेद्यम् च चासि ध्याता द्येयम् च यत्परम् ।**

***த்வமேவ ஹவ்யம் ஹோதா ச போஜ்யம் போக்தா ச ஸாஸ்வத:***

***வேத்யம் ச சாஸி த்யாதா த்யேயம் ச யத்பரம் ।।***

*அழிவற்றவரே நீரே ஹவிஸ்ஸாகவும், ஹோமம் செய்பவராகவும், உண்ணப்படும் பொருளாகவும் உண்பவராகவும் இருக்கிறீர். அறிய வேண்டிய பொருளாகவும், அறிபவராகவும் இருக்கின்றீர். த்யானம் செய்யப்படவேண்டிய பொருளாகவும் த்யானம் செய்பவராகவும் இருக்கின்றீர்.*

*காளிதாஸரின் ப்ரம்மத்துதி முற்றும்.*

# ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி

*108 அத்வைத வாசகங்கள்*

*பி. ஆர் கண்ணன், மும்பை*

विद्यया स्वाभाविक; परिपूर्ण; एक; आनन्द; अद्वैतो भवति । 1।

तैत्रीय भाष्यम् 2.8.1

*உண்மையான் ப்ரபோதத்தால் ஒருவன் அத்வைதமான ஆனந்தத்தையும் தன் பரிபூர்ண ஸ்வரூபத்தையும் அடைகிறான்.*

नहि विस्वम् नाम पुरुषात् अनयत् किन्चित् असित ।। 12

मुण्दकभाषयम् 2.1.10

**நஹி விஸ்வம் நாம புருஷாத் அன்யத் கின்ஜிதஸ்தி**

*இந்த புருஷனைக்காட்டிலும் விஸ்வம் அன்னியமாக இல்லை.*

मोक्ष: परविध्याविषय: स्वात्मप्रतिष्टालक्षण; परमानन्द अद्वय: ।। 13 ।।

**மோக்ஷ: பரவித்யாவிஷய: ஸ்வாத்மப்ரதிஷ்டாலக்ஷண: பரமான்னத அத்வய:**

*ஸ்வாத்மானபூதியும், பரவித்யையும் பரமானன்தமாயும் ஒன்றாக இருப்பது மோக்ஷமாகும்.*

इष्यते च सर्व उपनिषदाम् सर्वात्मैक्य प्रतिपादकत्वम् ।। 14 ।।

**இஷ்யதே ச ஸர்வ உப நிஷதாம் ஸர்வாத்மைக்ய ப்ரதிபாதகத்வம்.**

*(மாண்டூக்ய காரிகா பாஷ்யம் )*

*எல்லா ஜீவராசிகளிடத்தும் ஆத்மாவை காண்பது உபநிஷத்களின் நோக்கம்*

सर्वप्रपन्च उपसमो अद्वैत सिद्दि; ।। 15।।

**ஸர்வப்ரபன்ச உபசமே அத்வைத சித்தி:**

*(மாண்டூக்ய காரிகா பாஷ்யம்)*

*காணும் உலகம் மறைய தோன்றும் அத்வைத சித்தி*

शिवम् यत; अद्वैतम् भेदकलपरहितम् ।। 16।।

**சிவம் யத; அத்வைதம் பேதகல்பரஹிதம்**

*(மாண்டூக்ய காரிகா பாஷ்யம்)*

*பேதங்களற்றும் விகல்பமில்லாது இருப்பதும் சிவமாய் இருப்பதும் அத்வைதம்.*

द्वैत प्रपन्च उपशमे स्वशतता अद्वैत भाव: प्रयोजनम् ।।17।।

**த்வைத ப்ரபன்ச உபசமே ஸ்வஸ்ததா அத்வைத பாவ: ப்ரயோஜனம்.**

*(மாண்டூக்ய காரிகா பாஷ்யம்)*

*த்வைதப்ரபன்சம் மறைய தன்னிலையில் இருப்பதும் அத்வைதபாவம்.*

ब्रह्मात्मता अवगमादेव सर्वक्लेसप्रहरनात् पुरुषार्थ् सिद्दे: ।।18।।

**ப்ரம்மாத்மதா அவகமாதேவ ஸர்வக்லேசப்ரஹரணாத் புருஷார்த்த ஸித்தே:**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம்)*

*எல்லா துக்கமும் நாசமடையும் இடம் ப்ரம்மாத்ம அறிவினால்தான். மனிதனின் புருஷார்த்தசித்தியும் அதுவே.*

न हि एकत्व विग्यानेन उन्मतितस्य द्वैतविग्यानस्य पुनस्सम्भवो अस्ति ।।19।।

**ந ஹி ஏகதவ விக்யானேன உன்மதிதஸ்ய த்வைதவிக்யானஸ்ய புனஸ் ஸம்பவோ அஸ்தி.**

*த்வைதத்தின் துக்கம் ப்ரம்மம் ஒன்றே என்ற அறிவினால் மறையும், மீண்டும் பிறப்பு வராது.*

*(தொடரும்)*

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த் யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

*பருப்பொருள்களின் இயல்பு*

**ஸ்தூலபூதானி து பஞ்சீக்ருதானி ။ 98**

*பருப்பொருள்கள் பஞ்சீக்ருதமானவை. (பஞ்சீகரணம் ஆனவை)*

**பஞ்சீகரணம்து ஆகாசாதி பஞ்சஸ்வேகைகம் த்விதா ஸாமம் விபஜ்ய தேஷு சதஸு பாகேஷுப்ராத்மிகான் பஞ்சபாகான் ப்ரத்யேகம் சதுர்தா ஸமம் விபஜ்ய தேஷாம் சதுர்ணாம் பாகானாம் ஸ்வஸ்வத்விதீயார்த பாகப்பரித்யாகேன பாகாந்தரேஷு யோஜனம் ။ 99**

*ஆகாசம் முதலிய ஐந்து பூதங்களும் இரு ஸமமாகின்றன. மொத்தம் பத்து பாகங்கள். இதில் ஒரு பாதி அந்த பூதம். இன்னொரு பாதியை நான்காகப் பிரிகின்றது. ஒவ்வொரு கால் பங்கான ஒவ்வொரு பூதமும் மீதியுள்ள அந்த பூதத்தில் சேர்கின்றது.*

**ததுக்தம் ''த்விதா விதாய சைகக்ம் சதுர்தா ப்ரதமம் புன;**

**ஸ்வஸ்வேதர த்விதீயாம்சை: யோஜனாத் பஞ்ச பஞ்சதே'' ။**

**அஸ்யாப்ராமாண்யம் ந ஆசங்கனீயம் த்ரிவ்ருத்கரண ஸ்ருதே:பஞ்ஜீகரண ஸ்யாஅபி உபலக்ஷணத்வாத் ။ 100**

*இதற்கு ப்ரமாணத்திற்கு ஐயப்படவேண்டாம். த்ருவ்ருத்கரன ஸ்ருதி. இதற்கு உபலக்ஷணமாகும்.*

**பன்ஜானாம் பஞ்சாத்மகத்வே ஸமானே அபி தேஷு ச வைசேஷ்யாத்து தத்வாதஸ்தத்வாத: (ப்ரம் ஸூத்ரம் 2-4-22) இதி ந்யாயேன ஆகாசாதி வ்யபதேச; ஸம்பவதி ။ 102**

*இந்த ஐந்து பூதங்களும் பார்ப்பதற்கு ஸமமாக இருந்தாலும் ஒவ்வொன்றும் தன்னிடத்தில் எந்த பூதம் அதிகமாக உள்ளதோ அதன் பெயரைக் கொண்டிருக்கும். (ப்ருத்வீ பூதத்தில் மற்ற நான்கு பூதங்களின் அம்சமிருந்தாலும் ப்ருத்வியின் பங்கு அதிகமாக இருப்பதால் ப்ருத்வீ என்றே பெயர்.)*

**ததானீமாகாசேசப்தோ அபிவ்யஜ்யதே வாயௌ சப்தஸ்பர்சௌ அக்னௌ சப்த ஸ்பச்ச ரூபானி அப்ஸு சப்த ஸ்பர்சரூபரஸா: ப்ருத்வ்யாம் சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தாச்ச ॥ 103**

*ஆகாசம் ஸ்ப்ததையும், வாயு சப்த ஸ்பர்சத்தையும், அக்னி சப்தஸ்பர்ச ரூபத்தையும், நீர் சப்த்ஸ்பர்ச ரூப ரஸத்தையும் ப்ருத்வீ சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தத்தையும் வெளிபடுத்தும்.*

**ஏதேப்ய: பஞ்சீக்ருதேப்யோ பூதேப்யோ பூர்புவ: ஸ்ப: மஹ: ஜன: தப:ஸத்யம் இதி நாமகானாம் உபர்யுபரி வித்யமானானாம் அதல விதல ஸுதல ரஸாதல தலாதல மஹாதல பாதாளானாம் நாமகானாம் அதோ அதோ வித்யமானானாம் லோகானாம் ப்ரம்மாண்டஸ்ய ததந்தர்கத சதுர்வித ஸ்தூலசரீராணாம் தது சிதானாம் அன்னபானாதீனாம் உத்பத்தி: பவதி.**

*இந்த பஞ்சீகரணம் செய்யப்பட்ட பூதங்களிலிருந்து மேல் ஏழு லோகங்களும் கீழ் ஏழ் லோகங்களும் நான்கு விதமான ஸ்தூல சரீரங்களும் அவைகளுக்கு வேண்டிய அன்னபானங்களும் தோன்றும்.*

**சதுர்வித சரீராணி து ஜராயுஜ, அண்டஜ,ஸ்வேதஜ,உத்பித்ஜ்யாக்யானி ॥ 105**

*ஜராயுஜம் அண்டஜம், ஸ்வேதஜம், உத்பித்ஜம் என்று நான்கு வித சரீரங்கள் .*

**ஜராயுஜானி ஜராயுப்யோ ஜாதானி மனுஷ்ய பஸ்வாதினி நச 106**

*ஜரை எனும் கர்பத்திலிருந்து வருபவை (பசுக்கள், மனிதர்கள்) ஜராயுஜம்.*

**அண்டஜானி அண்டேப்யோ ஜாதானி பக்ஷிபன்னகாதினி ॥ 107**

*முட்டையிலிருந்து உண்டாகும் பக்ஷி முதலியவை அண்டஜம்.*

**ஸ்வேதஜானி ஸ்வேதேப்யோ ஜாதானி யூகமசகாதினி ॥ 108**

*ஈரப்பதனிலிருந்து உண்டாகும் கொசு பேன் முதலியவை ஸ்வேதஜம்.*

**உத்பித்ஜானி பூமிம் உத்பித்ய ஜாதானி லதா வ்ருக்ஷாதினி ॥ 109**

*பூமியை பிளந்து வரும் செடி கொடி மரங்கள் உத்பித்ஜம்.*

*(தொடரும்)*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

*வாஸுதேவஸ்து தச்ஸ்ருத்வா விஸ்வகர்மானமூசிவான்*
*குருஷ்வ குருராஜஸ்ய மஹேந்த்ரபுரி ஸன்னிபம்*
*இந்த்ரேண க்ருதனாமானம் இந்த்ரப்ரஸ்தம் மஹாபுரம் ।।*



விஸ்வ கர்மாவைப் பார்த்து வாஸுதேவர் ''குரு ராஜனுக்கு இந்த்ர லோகத்திற்கு இணையான ஒரு நகரத்தை நிர்மாணம் செய்'' என்றார்.

*ததஸ்து விஸ்வகர்மா து சகார புரமுத்தமம்*
*ப்ராகாரேண ச ஸம்பன்னம் திவமாவ்ருத்ய திஷ்டதா ।।*

ஸ்வர்கத்தை மறைக்கக்கூடிய ஒரு நகரத்தை விஸ்வகர்மா நிர்மாணம் செய்தார்.

*தத்ராகச்சன் த்விஜா [ராஜன்] ஸர்வவேதவிதாம் வரா:*
*நிவாஸம் ரோசயந்தி ஸ்ம ஸர்வபாஷாவிதஸ்ததா*
*வணிஜஸ்சாயயுஸ்தத்ர ஸர்வசில்பஸ்ததா ।।*

பண்டிதர்களான அந்தணர்களும், பன்மொழி விற்பன்னர்களும், வணிகர்களும், சில்பிகளும் அந்த நகரத்தை விரும்பி அங்கு சென்றனர்.

*உத்யானானி ச ரம்யாணி நகரஸ்ய ஸமந்தத;*
*தடாகானி ச ரம்யாணி ப்ருஹந்தி ஸுபஹூனி ச ।।*

அழகான பூங்காக்களும் தடாகங்களும் வாவிகளும் அன்னகரத்தில் அமைக்கப்பட்டிருந்தன.

*சாதுர்வர்ண்ய ஸமாகீர்ணம் இந்த்ரப்ரஸ்தம் யுதிஷ் ட்ர:*
*க்ருதமனகளஸத்காரைர்ப்ராம்மணைர்வேதபாரகை:*
*த்வைபாயனம் புரஸ்க்ருத்ய த்யொம்யஸ்யாபிதோ ஸ்தித;*
*ப்ராத்ருபிஸ்ஸஹிதோ ராஜா கேசவேன ஸஹாபிபூ:*
*தோரணத்வாரஸுமுகம் ப்ரவிவேச மஹத்யுதி; ।।*

மங்கலச் சடங்குகள் முடிந்தபின் தர்மர் வ்யாஸ்முனிவர் முன்னேக த்யௌம்யர் பின்னேக தன் தம்பிமார்கள் புடைசூழ கேசவருடன் நான்கு வர்ணத்தார்கள் புடை சூழ இந்த்ரப்ரஸ்தத்தின் தோரண வாயிலில் நுழைந்தார்.

***ப்ரவிஸ்ய பவனம் ராஜா ததோ வார்ஷ்ணேயம் அப்ரவீத்***

***தவ ப்ரஸாதாத் வார்ஷ்ணேய ராஜ்யம் ப்ராப்தம் மயா அனக***

***கதிஸ்த்வம் ஆபத்காலே அபி பாண்டவானாம் ச மாதவ ।।***

ராஜக்ருஹத்தை அடைந்தபின் தர்மர் க்ருஷ்ணரைப் பார்த்து ‘‘உன்னுடைய அருளினால் ராஜ்யம் கிடைக்கப் பெற்றேன். ஆபத்காலத்திலும் நீயே எமக்குக் கதி’’ என்று கூறினார்.

***க்ருஷ்ண: த்வத்ப்ரபாவாத் மஹாரயம் ஸம்ப்ராப்தம் ஹி ஸ்வதர்மத:***

***பித்ருபைதாமஹம் ராஜ்யம் கதம் ந ஸ்யாத் த்வ ப்ரபோ***

***யதேஷ்டம் பாலய ஜகச்ச்ஸ்வத் தர்மதுரம் வஹ ।।***

க்ருஷ்ணர் தர்மரே உன்னுடைய ஸ்வதர்மத்தினால் ராஜ்யம் கிடைக்கப்பட்டது. அது உனக்கு இல்லாமல் எப்படி போகும். யதேஷ்டம் நீ அதை தர்மத்தின்படி ஆள்வாயாக.

***ப்ராப்ய ராஜ்யம் மஹாதேஜ: ஸத்யஸந்தோ யுதிஷ் டிர:***

***பாலயாமாஸ தர்மேண ப்ருதிவீம் ப்ராதுருபீஸ்ஸஹ ।।***

தேஜஸ்வியும் ஸத்ய ஸந்தருமான தர்மர் தன் தம்பிகளுடன் அந்த ராஜ்யத்தை தர்மப்படி ஆண்டு வந்தார்.

***அர்ஜுனஸ்சிந்தயாமாஸ கதேன கதிதம் புரா***

***ஸுபத்ராயாஸ்ச மாதுர்யரூபஸம்பத் குணானி ச ।।***

கதனால் சொல்லப்பட்ட ஸுபத்ரை என்பவளின் மாதுர்யரூப குணங்களை அர்ஜுனன் சிந்தித்து கொண்டிருந்தான்.

***பாண்டவஸ்ய ஸுபத்ராயாச்ஸகாசே து யஸஸ்வின:***

***ஸமுத்பத்தி;ப்ரபாவேன கதேன கதித: புரா***

***தஸ்மாத் ஸுபத்ரா சகமே பௌருஷாத் பரதர்ஷபம் ।।***

இதேபோல் ஸுபத்ரையிடத்திலும் அர்ஜுனனைப்பற்றி கதனால் சொல்லப்பட்டது. அவளும் அவனை விரும்பினாள்.

(தொடரும்)

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

பாகம்-2

# ஸ்ரீ நாராயணதீர்த்தரும் அவர் அருளிச் செய்த ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியும்

*3. அதற்கு பிறகு, அவர் தன் குருவின் ஆக்ஞைப்படி தீர்த்த யாத்ரை மேற்கொண்டு காசி ப்ரயாகை, மதுராபூரி போன்ற க்ஷேத்திரங்களுக்குச் சென்று வழிபாடு செய்தார். காசியில் பல வருடங்கள் தங்கி ப்ரம்ஹோபாசனையில் ஈடுபட்டார். பிறகு காவேரிக் கரையில் உள்ள பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று வழிபாடு செய்து வரும் போது அவருக்கு தீராத வயிற்று வலி வந்து மிகவும் சிரமப்பட்டார்.*

*4. இப்படியாக திருவையாறு வந்தடைந்தார். அவ்வூரின் தெற்கே உள்ள நடுக்காவேரி எனும் கிராமத்தை அடைந்த போது, அவரின் வயிற்றுவலி மிக அதிகமாகி அங்குள்ள வினாயகர் கோயிலில் இரவு படுத்துறங்கினார். அவர் கனவில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தோன்றி நீ காலையில் விழித்தெழும்போது முதலில் எந்த மிருகத்தைப் பார்க்கிறாயோ அதைத் தொடர்ந்து செல். உன் வயிற்றுவலி நீங்கும் என்று சொல்லி அருளினார்.*

*5. அது போலவே மறுநாள் காலையில் கண்விழித்தபோது ஒரு வெள்ளைப் பன்றியைக் கண்ணுற்றார். காலையில் கண்விழிக்கும் போது பன்றியைப் பார்ப்பது அபசகுனம் என்று மனத்தில் தோன்றினாலும், ஸ்ரீ கிருஷ்ணனின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு அப்பன்றியை பின்பற்றிச் சென்றார். சுமார் 4 கி.மீ தொலைவு வரைத் அதனைத் தொடர்ந்து சென்றபின் மிகவும் களைப்புற்றார்.*

*6. அத்தருணம் அப்பன்றி அருகாமையில் உள்ள ஒரு கோயிலினுள் சென்று மறைந்தது. அச்சமயம் ஆகாசவாணியின் குரலைக் கேட்கலுற்றார். "என்னைத் தேடாதே உன்னை இங்கு வரவழைக்கவே நான் இவ்வாறு செய்தேன் என்ற குரலொலி கேட்டது. அதைக் கேட்ட அவர் மெய் சிலிர்த்து, ஆனந்த பரவசம் அடைந்தார்." அந்த க்ஷணமே அவருடைய தீராத வயிற்றுவலியும் மறைந்தது. பூபதிராஜபுரம் என்ற பெயர் பெற்ற அக்கிராமம் அன்று முதல் வாராஹபுரி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது. வராஹி என்ற ஸம்ஸ்க்ருத சொல்லுக்கு பன்றி என்று பொருள்.*

*7. ஸ்ரீ தீர்த்தர் அந்த இடத்தின் மஹிமையை உணர்ந்து கிராமஜனங்களின் உதவியுடன் அந்த பூமியை அகழ்ந்து பார்த்ததில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் தேவியை அணைத்தவாறு உள்ள ஸ்வயம்பு ஸிலாமூர்த்தியைக் கண்டெடுத்து அந்த இடத்தில் ஒரு*

*கோயிலை பக்தர்களின் சஹாயத்துடன் நிர்மாணித்து பகவானைப் ப்ரதிஷ்டை செய்து பூஜா வழிபாடுகள் தினமும் நடக்க ஏற்பாடுகள் செய்தார்.*

*8. அவர் தம் வாழ்நாள் முழுவதும் அந்த புண்ணிய வராஹ க்ஷேத்திரத்திலேயே தங்கி உலகப்புகழ் பெற்ற ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணி என்ற பக்தி சுவை சொட்டும் பாடல்கள் நிரம்பிய காவ்யத்தை அருளிச் செய்தார். அவர் ஸங்கீதத்திலும், நடன சாஸ்த்திரத்திலும் வல்லுநராக இருந்ததால் தன் இஷ்ட தேவதையான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடம் உள்ளத்தின் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துவதற்காக ஸங்கீதத்தையும், நாட்டியத்தையும் தன் பாடல்களில் சேர்த்துள்ளார். இந்த காவ்யத்தின் தனிச்சிறப்பு என்னவென்றால், ஸ்ரீ கிருஷ்ண ஸந்நிதியில் அவர் எழுதிய அத்தனைப் பாடல்களுக்கும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ ருக்மிணி தேவியுடன் நடமாடி தன் அங்கீகாரத்தை வழங்கினார் என்றும் அவர்களின் சலங்கை ஒலியை மட்டும் ஸ்ரீ நாராயணதீர்த்தர் கேட்டார் என்றும் சொல்லப்படுகிறது. இங்கு குருவாயூர், ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீ நாராயணபட்டத்திரியின் ஸ்ரீ நாராயணீயம் முழுவதற்கும் அங்கீகாரம் வழங்கியதையும் நினைவு கூறுவோம்.*

*9. வடமொழியில் தரங்கிணி என்ற சொல் அலைகளுடன் கூடிய ஆற்றை குறிப்பதாகும். ஸ்ரீ கிருஷ்ணனுடைய லீலைகள் ஆகிற அலைகளை 12 தரங்க பிரிவுகளுடன் கொண்டுள்ளதால் இந்நூலுக்கு ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணி என்ற பெயர் ஏற்பட்டது. இந்த நூலில் 300 ஸ்லோகங்கள் 163 கீதங்கள் 31 சூர்ணிகைகள் அடங்கியுள்ளன.*

*10. ஸ்ரீ நாராயணதீர்த்தர் கடினமான சொற்களைத் தவிர்த்து லலிதமான சொற்களாலேயே தன் கத்யங்களையும், பத்யங்களையும் சுலபமாக புரிந்து கொள்ளும் வகையில் அமைத்துள்ளார். ஸ்லோகங்களையும், சூர்ணிகைகளையும் கீதங்களிடையே சந்தர்பத்துக்கேற்ப அழகுபட பொருத்தியுள்ளார். ஸ்லோகங்கள் 17 அழகிய பல விருத்தங்களிலும், கீதங்கள் 34 மனம் கவரும் ராகங்களிலும் கேட்போரை நடனம் ஆட வைக்கும் 10 தாளங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.*

*11. இந்த நூலில் ஸ்ரீமத் பாகவதம் தஸ்ம ஸ்கந்தம் 1 முதல் 58 வரையுள்ள அத்யாயங்களில் கூறப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணனின் அவதாரம் பால லீலைகள் கன்றுகளை மேய்த்தல் கோபீ வஸ்த்ராபஹரணம் கோவர்தனகிரி உத்தாரணம் ராஸக்கிரீடை கம்ஸன் முதலிய துஷ்டர்களை அழித்தல், கடலின் நடுவே துவாரகையை நிர்மாணித்து அதனுள் ப்ரவேசித்தல் ஸ்ரீ பலராம விவாஹம் ஸ்ரீ கிருஷ்ண ருக்மிணி விவாஹத்தை வர்ணிப்பதோடு அஷ்டமஹிஷிகளுடனான விவாஹமும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

தொடரும்

# அத்வைத ஸித்தாந்த வினா விடை

***வினா :*** *- பண்டைய காலத்திலேயே வேற்று நாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு வந்த கொள்கை முதலியவைகளைக் குறிக்கத் தமிழ்ச் சொற்களை வழங்காமல், அப்பிறநாட்டுச் சொற்களை வழங்கியதற்குச் சான்றுகள் உண்டா?*

***விடை :*** *- வடநாட்டில் மஹாவீரஜினர், புத்தர் முதலியவர்களால் புதிதாகத் துவக்கப்பட்ட ஜைனம், புத்தம் ஆகிய இம் மதங்கள் தமிழ்நாட்டில் புகுந்து சுமார் 1000 வருஷ காலம் வரை இருந்தும், அச்சமய சம்பந்தமான சொற்கள், அந்நாட்டுப் 'பாலி' மதலிய சொற்களாகவே இருக்கின்றன. அவற்றைக் குறிக்கும் சொற்கள் தமிழில் அமையவில்லை. சமணர், சாவகர், புத்தர், ஆருஹதர், பீடகம் முதலிய சொற்கள் அந்நாட்டுப் பிராகி ருதச் சொற்களே அமணர் முதலிய சொற்களும் பாகத மொழியின் சிதைவே.*

*ஆதலால், தமிழ்நாட்டில் அனாதியாய் உள்ள எல்லா உயரிய நூல்களுக்கும் வேதக் கருத்தே கருத்து.*

***வினா :*** *- வேதாந்தத்தின் கருத்தைத் தமிழில் விசேஷமாக விளக்கியிருப்பவர் யார்?*

***விடை :*** *- சைவத் திருமுறைகளுள் ஒன்றான திருமந்திரத்தைப் பாடிய திருமூலநாயனார்.*

***வினா :*** *- திருமுறைகளில் இவருக்கும் இவருடைய நூலுக்கும் என்ன சிறப்பு?*

***விடை :*** *- இவர் கூடு விட்டு கூடு பாய்ந்த சித்தர்; பதினெண் சித்தர்களில் ஒருவர். அறுபத்துமூன்று நாயன்மார்களிலும் ஒருவர். இவரைத் தவிர்த்து வேறு நாயன்மார்களுக்குச் சித்தர் கணத்தில் இடமில்லை. இவ்விரண்டு சிறப்பும் பெற்றவர் இவரொருவரே. சிறந்த ஆசிரியர் எழுதியதாகையால், நூலும் சிறந்த ஆதாரமாயிருக்கிறது.*

*மேலும், சரித்திர நூலான பெரிய புராணத்தை விட்டு விட்டால் திருமந்திரத்தைத் தவிர, மீதியுள்ள திருமுறை நூல்கள் தோத்திரங்களாக மட்டும் இருக்கின்றன. திருமுறைகளிற் சேராத இதர சைவ நூல்கள் சாத்திரங்களாக மாத்திரம் இருக்கின்றன. இந்தத் திருமந்திரம் மட்டும் தோத்திரமாகவும் இருக்கிறது; சாத்திரமாகவும் இருக்கிறது. அதனாலேதான் 'திருமந்திரம்' திருமுறைகளுள்ளும் சிறந்த ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது.*

**வினா : -** திருமந்திரத்தில் அத்வைத வேதாந்த தத்துவத்தை விளக்கும் பாடல்கள் எவை?

**விடை : -** நூற்றுக்கணக்காக இருக்கின்றன. அவற்றுள் சில இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

1. வேதாந்தங் கண்டோர் பிரம்மமித்தியாதார்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மல்லாத சித்தாந்தங் கண்டுளோர்
சாதாரணமன்ன சைவரூபாயமே

(பிரம்ம - மித்தியா - தார் - பிரம்ம - தையம் - ஜகத்துமித்யா என்பது அத்வைத வேதாந்தத்துணிபு)

ஈண்டுவேதாந்தம் என்ற சொல்லால் அத்வைத வேதாந்தத்தையே குறிப்பது நோக்கத்தக்கது.

2. வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்
வாழ்க்கைப் புனல்வழி மாற்றிச் சித்தாந்தத்து
வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே
தாழ்கும் தலையினோம் சற்சீடனாமே

(வாழ்க்கைப் புனல் வழிமாற்றி - ஸம்ஸார நிலையில் வெளி நோக்கிச் செல்லும் 'அறிவு' என்னும் பிரவாஹத்தின் போக்கை ஆன்மாவிடம் செல்லும்படி திருப்பி)

3. வேதாந்தந் தன்னி லுபாதிமேலேழ்விட
நாதாந்த பாசம் விடும்; நல்லதொம்பதம்
மீதாந்த காரணோ பாதியேஷ் மெய்ப்பரன்
போதாந்த தற்பதம் போமசியென்பவே

இப்பாட்டு 'தத்' என்னும் பதமும், 'த்வம்' என்னும் பதமும் 'அஸி' என்னும் பதமும் அடங்கிய வேதாந்த மஹாவாக்கியத்தின் பொருளை விரித்துக் கூறுவது. (ஜீவனுடைய ஸ்வரூபத்தை மூடிக் கொண்டிருக்கும் உபாதிகளும், ஈசனுடைய ஸ்வரூபத்தை மூடிக் கொண்டிருக்கும் உபாதிகளும் 'அஸி' என்னும் சொல் விளக்குங்கால் போய்விடுகின்றன.

(தொடரும்)

தமிழ்நாடு பிராமண சங்கம்-ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ் இணைந்து கைலாஷ் யாத்திரையை

# சலுகை கட்டணத்திலும், மாதாந்திர தவணையாகவும்

## செலுத்தக் கூடிய வகையில் சேவை மனப்பான்மையுடன் நடத்தும்

# கைலாஷ்-மானஸரோவர்

மற்றும் வைணவ சம்பிரதாயத்துடன் கூடிய **முக்திநாத் திவ்யதேச யாத்ரா-2020**

**20 ஆண்டுகளில் 7300 சிவனடியார்கள் தரிசனம் பெற அழைத்து சென்று சாதனை கொண்ட ஒரே நிறுவனம்**

சிவமே தமிழ் - தமிழே சிவம். மனிதனாகப் பிறந்த நம் அனைவருக்கும் இறைவனைக் காண வேண்டும் என்ற எண்ணம் மனதின் அடியிலே இருந்துகொண்டே இருக்கிறது. அந்த இறைவனாகிய எம்பெருமான் சிவனையும் பார்வதி தேவியையும் வாழ்க்கையில் ஒருமுறையேனும் கயிலையில் நேரில் தரிசித்து எல்லையில்லாப் பேரின்ப நிலை அடையவும், மேலும் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று மானஸரோவர் தடாகத்தில் சிவபூஜைக்குப்பின் திருமுறைகளோடு, கயிலாய வாத்தியங்கள் இசைக்க, சங்க நாதம் ஒலிக்க, தமிழ் வேதங்களுடன், சிவ வாத்திய முழக்கத்தோடு அடியார்கள் ஆனந்த நடனமாட, சகல பரிவாரங்களும் அசைந்து வர, வரலாறு பதிவு செய்யும் விதமாக அடியார்கள் ஒருங்கிணைந்து நடத்தும் மாபெரும் இந்துக்களின் இறைநெறியான திருவாசகம் முற்றோதலுடன் கூடிய இந்த யாத்திரையின் மூலம் எழுச்சி மிக்க அபரிதமான ஆயுளை நீடிக்கச் செய்யும் சகல சக்திகளும் நிறைந்த பிரபஞ்ச உயிர் சக்தியை நீங்கள் நேரில் பெறவும், மகிமைகொண்ட பிரபஞ்ச தெய்வீக நடனமான (Cosmic Dance) சிவதாண்டவத்தை நேரில் தரிசிக்கவும், மேலும் நமது உடலின் அத்தனை ஆதார சக்கரங்களும் விழித்துக் கொள்ள ஆன்ம சக்தி இறைசக்தியோடு எழுச்சியுடன் இணைவதை நீங்கள் உணரவும் ஓர் அரிய வாய்ப்பு!

ஆன்மீக அதிசய அற்புதங்கள் நிகழ்ந்த, தெய்வங்கள் வாழ்கின்ற திருக்கயிலையில்

**நடையிடுங்கள்!**

மானஸரோவர் புனித நீரில் மூழ்கியெழும் பேறுபெற்று தெய்வீக மர்மங்கள் நிறைந்த அவ்விடத்தில்

**தியானியுங்கள்!!**

கயிலாயத்தின் சூட்சம அதிர்வுகளையும், கயிலாயத்தின் ரகசியங்களையும்

**உணர்ந்திடுங்கள்!!!**

## தாங்கள் கடவுளைக் காணப் போகிறீர்கள்!
## கடவுளோடு கலந்துறவாடப் போகிறீர்கள்!!

| மே 07 | ஜூன் 05 | ஜூலை 04 | ஆக.03 | செப்.01 |
|---|---|---|---|---|
| சித்ரா பௌர்ணமி | வைகாசி பௌர்ணமி | ஆனி பௌர்ணமி | ஆடி பௌர்ணமி | சிவ-பார்வதி திருக்கல்யாண சிறப்பு பெருவிழா யாத்திரை |

| | | |
|---|---|---|
| சென்னையிலிருந்து ரயில் மூலம் டெல்லி வழியாக காட்மண்டு அடைந்து, பின்பு அங்கிருந்து தரை வழியாக சூப்பர் டீலக்ஸ் ஏசி வாகனம் மூலம் கைலாஷ் யாத்திரை சென்று வர 20 நாட்கள் | காட்மண்டுவிலிருந்து தரை வழியாக சூப்பர் டீலக்ஸ் ஏசி வாகனம் மூலம் கைலாஷ் யாத்திரை சென்று வர 14 நாட்கள் | சென்னையிலிருந்து விமானத்தில் லக்னோ வழியாக ஹெலிகாப்டர் மூலம் கைலாஷ் யாத்திரை சென்று வர 11 நாட்கள் |

அனைத்தையும் குணமளிக்கும் சக்தி நிறைந்த மானஸரோவர் தடாகத்தில் புனித நீராடி தெய்வீக அதிசயங்களை காணவும், கிரிவலம் சென்று கயிலைநாதனை முழுமையாக தரிசிக்கவும், நமக்குள்ளே இருக்கும் பிரபஞ்சம் தூண்டப்படவும், ஆற்றல் மிக்க பாசிடிவ் காஸ்மிக் எனர்ஜி நம்முள் பிரவேசித்து பிரதிபலிப்பதை நிதர்சனமாக உணர்ந்து தெய்வீக பேரின்ப நிலையை அடையவும், யோகா மற்றும் பிராணாயாமம் போன்ற சிறப்பு பயிற்சிகளை முறையாக அளித்து யாத்திரை முழுவதும் நாங்களே உடன் இருந்து தகுந்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்வது இந்தியாவிலேயே யாத்திரையில் 20 வருடம் அனுபவம் கொண்ட நாங்கள் மட்டுமே

**ஸ்ரீராமானுஜரின் 1003வது அவதார ஜெயந்தி விழாவை முன்னிட்டு ஸ்ரீராதா கல்யாணம், உபன்யாசம், பாராயணத்துடன் கூடிய**

# நேபாள்-ஸ்ரீசாளகிராம முக்திநாத் திவ்யதேச யாத்ரா

ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை மாதம் ஒரு குழு புறப்படும் | ரயில் மூலம் 12 நாட்கள் விமானம் மூலம் 6 நாட்கள்

சீனா, திபெத், நேபாள் டூரிஸம் போர்டில் பெர்மிட் மற்றும் விசாவை நேரடியாக பெறுவதால் குறைந்த கட்டணத்தில் ரயில் மூலம் சென்னையிலிருந்து காட்மண்டு வரை தொடர்ந்து அழைத்துச் செல்வது நாங்கள் மட்டுமே!

*ஞான ஒளி வீசும் சிவனின் வாசஸ்தலத்தை தரிசிப்பதன் மூலம் காணக்கிடைக்காத பல அற்புதங்களை தாங்கள் காணப் போகிறீர்கள். தங்களின் உள்ளத்தையும், உணர்வுகளையும் உயர்த்தி மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு உயரப் போகிறீர்கள். நூறு பிறவியின் பெரும்பயனை அடையப் போகிறீர்கள்*


**கயிலை தரிசனம் நம் வாழ்வை நீடிக்கும் ஆற்றல் கொண்ட அதிர்வலைகளைக் கொண்டது**

GET ₹ 40,000 FOR KAILASH
GET ₹ 10,000 FOR MUKTHINATH
SUBSIDY FROM TAMILNADU GOVT.

#1 yatra

தெய்வீக புதிராக நிற்கும் கயிலை மலையானை தொட்டு ஸ்பரிசித்து மெய்சிலிர்க்க வைக்கும் பேரின்நிலை, யோகநிலை அடைய தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கும்

# ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்®




sapyservice@gmail.com | www.annapooraniyatra.com

63, NADU STREET, MYLAPORE, CHENNAI-4 ✆ 8056 333 333, 8056 444 444


யாத்திரை பதிவு கட்டணம் ரூ. 5,000 மட்டுமே. மேலும் கைலாஷ்-மானஸரோவர், முக்திநாத் யாத்திரை கட்டணம் மற்ற நிறுவனங்களை விட ரூ. 10,000 குறைவே.

SPECIAL CARE FOR SENIOR CITIZENS
PASSPORT WILL BE ARRANGED

சீன, திபெத், நேபாள அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

தெய்வ உலகம் திருக்கயிலையில் இறைவனை நீங்கள் பார்க்கலாம்! இறைவன் பேசுவதை நீங்கள் கேட்கலாம்! இறைவனோடு நீங்கள் பேசலாம்! இறைவன் நடத்தும் அற்புதங்களை நீங்கள் உணரலாம்!

**யாத்திரையில் கலந்துகொள்ளும் அனைத்து அடியார்களையும் கிரிவலம் அழைத்துச் செல்வதே எங்களின் முக்கிய நோக்கமாகும்**

ஸ்ரீகுருப்யோ நம:

# சென்னையில் ஸ்ரீஜகத்குரு

சேது.

ஸ்ரீஆதிசங்கர பகவத் பாதர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சர்வக்ஞ பீடமான ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தின் 68 வது பீடாதிபதியாக 87 ஆண்டுகளுக்கு மேல் அலங்கரித்தவரும், கடந்த நூற்றாண்டின் அவதார புருஷரும் ''நடமாடும் தெய்வமென்று'' பல்லோராலும் போற்றப்படுவருமான ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், 1932ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக நான்கு மாதங்கள் பூஜையுடன் சென்னையில் தங்கியிருந்த பொழுதும், மீண்டும், 1957-59 ல் சென்னை மயிலாப்பூர் சம்ஸ்கிருத கல்லூரியில், ஸ்ரீசந்திர மௌளீஸ்வரர் பூஜையுடன் ஸ்ரீ புதுப்பெரியவாளுடனும் முகாமிட்டிருந்த பொழுதும், பூஜைக்குப்பின் நாள்தோறும் பொது மக்களுக்கு வழங்கிய அனுக்ரஹ பாஷணங்கள் மிகவும் சரித்திர பிரசித்தி பெற்றவை. அவை, பின்னர் கலைமகள் பத்திரிகையினரால், ''ஆசார்ய ஸ்வாமிகள் உபன்யாசங்கள்'' என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டு புத்தகமாக வெளியிடப்பட்டது.

இப்புத்தகத்தின் முன்னுரையில், பதிப்பாசிரியர், ''ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகளின் உபன்யாச முறையே தனிச்சிறப்பு பெற்றது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றிச் சொல்வார்கள். அதிகப் பிரயாசை இல்லாமல் வேதக் கருத்துக்களை, புராண மேற்கோள்களை ஆங்காங்கு பொருத்தமாகச் சொல்வார்கள். ஆற்றொழுக்குப் போல் கருத்துகளும் மேற்கோள்களும் தங்கு தடையின்றி வருவதைக் கேட்க ஆச்சரியமாக இருக்கும்'', என்று கூறுகிறார்.

மேலும் அந்த பதிப்பாசிரியர் கூறுவதாவது,'' ஸ்ரீ ஸ்வாமிகள் அநேக விஷயங்கள் பற்றி பேசுகிறார்கள் - எந்த வித முன்னேற்பாடுமின்றி. உண்மையில் இதில் வியப்படைவதற்கு என்ன இருக்கிறது? ஒன்றைக் கண்டுகொண்டவர்களுக்கு பலவற்றை புரிந்து கொள்வது கடினம் இல்லை. அவருடைய உபதேசத்தில் பழமையில் புதுமையையும் புதியதில் பழமையையும் உணர்ந்து ரசிக்க முடியும்''.

மேற்சொன்ன நிகழ்வுகள் நடை பெற்று, 62 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அதேபோன்று, 2019 ஜூலை மாதம் தொடங்கி ஜனவரி 2020 வரை இடையில் தாம்பிரபரணி அந்திம புஷ்கரத்திற்காக நெல்லை சென்ற சில நாட்கள் தவிர்த்து, ஐந்து மாதங்களுக்கு மேலாக இரு தவணையாக, தற்போதைய பீடாதிபதிகள், ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீசந்திர மௌளீஸ்வரர் பூஜையுடன் சென்னையிலேயே தங்கியிருந்து அனேகமாக நாள்தோறும் பூஜைக்கு முன்னரோ பின்னரோ, பக்தர்களின் கோரிக்கைகளை புன்னகையுடனும் ஆர்வத்துடனும் ஏற்று, ஆலய கும்பாபிஷேக நிகழ்சிகள், இசைவிழா விழாக்கள் உள்ளிட்ட பல்வேறு கலை

கலாசார விழாக்களுக்கு நேரில் சென்று ஆசீர்வதித்தும் பல விஷயங்கள் பற்றியும் அனுக்கிரஹ பாஷணங்கள் வழங்கியும் வருகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்திலும், சில நாட்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளிலும், வேறு வேறு பொருளில் கூட்டத்தினரின் தன்மை, அவர்கள் வேத அல்லது ஆகம பண்டிட்களா, பள்ளி அல்லது வேத பாடசாலை மாணவர்களா, இளைஞர்களா, கல்லூரி மாணவ மாணவியரா, குடும்பஸ்தர்களா, தொழிலதிபர்களா, வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்களா, PROFESSIONALS என்று அழைக்கப்படும் சட்டம் மற்றும் பட்டையக் கணக்காளர்களா, மருத்துவர்களா என அறிந்து, அவர்களின் எதிர்பார்ப்பு, அவர்களது சூழ்நிலை, அன்றைய விழாவின் அல்லது கூட்டத்திற்கான காரணங்கள் முதலியவற்றை மனதில் கொண்டு அந்தந்த இடத்திற்கேற்ற வகையில் வெகு அனாயாஸமாக, தான் வழங்கவுள்ள மையக்கருத்துக்கு/ பொருளுக்கு ஏற்றதான வேத புராண இதிகாஸ மேற்கோள்களுடன் தமிழ், சம்ஸ்கிருதம் இந்தி என்று என எந்த மொழியாயினும் வெகு சரளமாக பேசுவது ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு கை வந்த கலை. அதிலும் குறிப்பாக தமிழ் மொழியெனில், எதுகை மோனையுடனும் பொருள் பொதிந்த அடுக்கு மொழியிலும் சரளமாக பேசுவதில் அவர்களுடைய பூர்வாச்சார்யாள் போலவே படு சமர்த்தர் கேட்போரை மனத்தில் கொண்டு, பேச்சின் ஊடேயும் இளைய தலைமுறையினர் பற்றிய தற்போதைய நிலைபற்றியும் அவர்கள் அனைவருமே கல்வி, கேள்விகளிலும், தம் தம் கடமைகளிலிருந்தும் தர்மங்களிலிருந்தும் வழுவாது அதே சமயத்தில் நவீன கணிணி போன்ற சாதனங்களை தனி மனித மற்றும் ஒட்டு மொத்த மனித குலத்தின் முன்னேற்றத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்ற கருத்துக்களை வலியுறுத்துவதும் தனிச் சிறப்பு. ஆம், ஸ்ரீ மஹாஸ்வாமி உபதேசங்களில் காணப்படுவது போலவே, பழமையில் புதுமையையும் புதியதில் பழமையையும் இவர்களுடைய, உபதேசத்திலும் உணர்ந்து ரசிக்க முடியும்.

பல வகைப் பூக்களிலிருந்து தேனீக்களால் சேகரிக்கப்படும் தேன், அதன் அடிப்படை குணங்கள் அனைத்தையும் கொண்டதாயினும், தாமரை போன்ற பூக்களிலிருந்து சேகரிக்கப்படும் தேனானது தனித்த குணமுடையதாக காணப்படும். அது போலவே, பற்பல கூட்டங்களில் நிகழ்த்தப்பட்ட ஸ்ரீ பெரியவாளின் உபதேசங்கள் யாவும் சரளமாகவும் காலத்திற்கேற்றதாகவும் பொருள் பொதிந்ததாகவும் இருந்தாலும் ஒவ்வொன்றும் அதனதன் விசேஷ தன்மையுடன் கூடியதாக இருப்பது கண்கூடு. அவ்வகையில் சமீபத்தில் ஸ்ரீ பெரியவாள் நிகழ்த்திய அனுக்ரஹ பாஷணம் ஒன்றினைக் காணலாம்.

தஞ்சையை தலையிடமாகக் கொண்டதும், மத்திய அரசின் Ministry of Culture ன் அங்கமானதுமான, தென் இந்திய கலை, கலாசார, பண்பாட்டு மையம், ''பாரதீய சாஸ்த்ரீய வாத்யோத்ஸவ் 2019 என்ற தலைப்பில், 22-12-2019 முதல் 29-12-2019 வரை சென்னையில் சாஸ்த்ரீயமான கர்னாடக இசையினை தலையாய இசைக்கருவி கலைஞர்களைக் கொண்டு

பெரிய அளவிலான இசை விழாவினை நடத்தியது, மேற்படி மையத்தின் இயக்குநர் அலுவலக அழைப்பினை ஏற்று கடந்த 29-12-2019 மாலை நிறைவிழாவில் கலந்து கொண்டு ஸ்ரீ ஸ்வாமிகள் ஆற்றிய உரை :

''குருர் பிருமா குருர் விஷ்ணு: குருர் தேவோ மஹேஸ்வர: குருசாக்ஷாத் பரம் ப்ரும்மா தஸ்மை ஸ்ரீ குரவே நம : ''

''அகர முதல எழுத்தெல்லாம், ஆதிபகவன் முதற்றே உலகு. ''

''நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க. ''

பகவத் கீதையிலே, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, அவருடைய விசேஷ அனுக்ரஹம் பொருந்திய பல்வேறு அம்ஸங்களைச் சொல்லும் பொழுது, ''வேதானாம் சாமவேதோஸ்மி'' என்று சொல்கிறார். ''ஸ்ரோதஸாமஸ்மி ஜாஹ்நவி'' நதிகளிலே கங்கையாக இருக்கிறேன், வேதங்களிலே சாம வேதமாக இருக்கிறேன்; மலைகளிலே இமய மலையாக நான் இருக்கிறேன், எழுத்துக்களிலே அகாரம், ''அக்ஷராணாம் அகாரோஸ்மி'' என்கிறார். அதுபோன்று ''மாஸானாம் மார்கசீர்ஷோஹம்'', என்பதாக மாதங்களிலே மார்கசீர்ஷ மாதமாக, சௌரமானப்படி மார்கழியாகவும் சாந்த்ரமானப்படி மார்கஸீர்ஷமென்றும் சொல்லப்படும் ''மாதங்களிலே மார்கழியில்'' அவருடைய விசேஷ அம்ஸம் பொருந்தி இருப்பதாக பகவத் கீதை சொல்கிறது. . இந்த புனிதமான மார்கழி மாதத்திலே ''மார்கழி திங்கள் மதி நிறைந்த நன்நாளாம்'' என்று சொல்லக் கூடிய இந்த நன் நாளிலே, இவ்விழா கொண்டாடப்படுகிறது கிராமம் தோறும் இது கொண்டாடப்படுகிறது, வீடு தோறும் கொண்டாடப் படுகிற விழாவாக இந்த விழாவிருக்கிறது. ஒவ்வொரு வீட்டு வாசலிலேயும் சாணி தெளித்து கோலம் போட்டு, கோலத்தின் மீது கோமேயத்தை சாணி வைத்து அதன் மேலே பூஷிணிப்பூவை வைத்து மார்கழி திருவிழாவை பக்திபூர்வமாகக் கொண்டாடி வருகிறார்கள். கிராமங்களிலே இருக்கக் கூடிய பழைய கால ஓவியங்களாக எழுதி வைக்கப்பட்ட கிருஷ்ணருடைய படம் ராமருடைய படம் வைத்து பஜனை மடங்கள் என்பதாகக் குறிப்பிட்டு, அந்த பஜனை மடங்களிருந்து கிளம்பி, தீபத்தையும் கையிலே ஏந்தி முதியவர்கள் இளைஞர்கள் சமுதாயத்திலே இருக்கிற பல்வேறு வயதினரும் வயதானவர்கள் கூட குளிரிலேயும் விடியற்காலையிலே பஜனை செய்து கிராம வலம் வந்து பக்தியோடு பகவன் நாமாக்களைச் சொல்லி அடக்கத்துடனும் அன்புடனும் இறைவனை வழிபடக்கூடிய ஒரு பாரம்பர்யத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கோவில்களிலே திருவெம்பாவையும் திருப்பாவையும் சொல்லப்பட்டு பாசுரங்கள் பாடப்பட்டு பக்தர்களுக்கு ப்ரஸாதங்கள், இறைவனுடைய பிரஸாதமாக பொங்கல் போன்றவை அளிக்கப்பட்டு- இப்படி ஒரு தெய்வீகமான முறையிலே இந்த மார்கழி மாதம் முழுவதும், ''முப்பதும் தப்பாமே'' என்றபடி, மாதம் முழுதும் கொண்டாடப்படுகிறது. இந்த கொண்டாட்டத்தின் அங்கமாக சென்னை மாநகரத்திலே கார்த்திகை தொடங்கி, ஒரு தெய்வீகமாக 30 நாட்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த

கொண்டாட்டங்களின் ஒரு அங்கமாக கார்த்திகை தொடங்கி மார்கழி என்றல்ல, கார்த்திகை தொடங்கி, 15 நாட்கள் என்பது 30 நாட்களாகி இப்பொழுது 45 /48 நாட்கள் மண்டல பூஜையாக, மூன்று விழாக்கள் நடை பெற்று வருகின்றன. ஒன்று கிருத்திகா மண்டல வேதபாராயணம், ருக், யஜுர் சாம வேத பாராயணங்கள் ஆங்காங்கே 45 நாட்கள் நடைபெறுகின்றன. இரண்டாவது இசை நிகழ்ச்சிகள், கார்த்திகை மாதமே தொடங்கி மார்கழி முழுவதும் நடைபெறுகின்றன. மூன்றாவது வ்ரதம் இருந்து கோவிலுக்கு செல்லக் கூடியவர்கள் சபரி மலை செல்லக் கூடியவர்கள் என்று மண்டல விழாவாக தொடங்கிவிடுகிறது. இப்படி விரதம் பாராயணம் உற்சவம் என்று பக்தி பூர்வமாகமான இந்த கார்த்திகை மார்கழி மாதங்களிலே சிறப்பான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதிலே கலை நிகழ்சிகள் பல்வேறு சபாக்கள் மூலமாக சாஸ்த்ரீய சங்கீத நாட்டிய விழாவும் இயல் இசை நாடகம் நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதிலே சதஸ் மற்றும் கச்சேரிகளும் நடைபெறுகின்றன.

தற்பொழுது நாம சங்கீர்த்தனமும் சில வருஷங்களாக சிறப்பாக மேடைகளிலே பாடப்பட்டு வருகின்றன. நாட்டிய விழாவும் இயல் இசை நாடகம் என்று நடை பெற்று வருகின்றன. நாகரீகம், ''சிவிலைசேஷன்'' எனும் பொழுது கலைகளுக்கு சிறப்பான இடம் இருக்கிறது. மனிதனுடைய நாகரீகம் என்பது நடை உடை பாவனை பேச்சு சிந்தனை என்று அனைத்திலும் இருக்கிறது. இங்கே மந்திரி சொன்னார்,'' உடை வாங்குவதற்கும் உதவி செய்கிறோம்'' என்றார்கள் . பொருத்தமான உடைகள் கலாசாரத்தை பிரதிபலிக்கக் கூடிய உடைகள். இப்படி நாகரீகம் மனித நாகரீகம் வளர்வதில் கலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. உதவுகின்றன. எளிமையான வழிகளிலே நளினமான வழிகளிலே, சுவாரஸ்யமான வழிகளிலே, ரஸிக்கக் கூடிய விதத்திலே, புரிந்து கொள்ளும் விதத்திலே, ஏற்றுக் கொள்ளும் விதத்திலே, நல்ல கருத்துகளை பல வண்ணங்களிலே அதாவது இசை மூலமாக இலக்கியங்கள் மூலமாக பல்வேறு கதா காலக்ஷேபங்கள் மூலமாக அறிவுரைகள் மூலமாக பல்வேறு வாத்தியக் கருவிகள் மூலமாக நாகரீகம் வளர உதவுகின்றன. எங்கோ தோப்பிலே இருக்கக் கூடிய மூங்கில் இங்கு மேடைக்கு வந்து நல்ல சந்தேசங்களை அதாவது நல்ல செய்திகளைத் தருகிறது. இறைவனுடைய படைப்பிலே உருவான மண்பாண்டங்களில் ஆரம்பித்து ''கடம்'', அல்லது கஞ்சிரா அல்லது புல்லாங்குழல் அல்லது புதியதாக வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட மாண்டலின் போன்றவை அனைத்தையும் நம்மை நல்வழி படுத்துவதிலே பயன்பட்டு வருகின்றன. இவை யாவும் கனமான மனதை லகுவாக்குவதற்கும், சஞ்சலமான மனதை ஸ்திரமாக்குவதற்கும், துர்பலமான மனதை திடமாக்குவதற்கும் குறுகிய மனதை விரிவு படுத்துவதற்கும் உதவுகின்றன. இப்படி மனதை சீர் படுத்துவதிலே, செம்மைப் படுத்துவதிலே, அழகு படுத்துவதிலே அகலப் படுத்துவதிலே, பலப்படுதுவதிலே இந்த கலைகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

(தொடரும்)

# ஸ்ரீமடம் முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

- *28.12.2019 அன்று மாலை வேளச்சேரியில் நீலகண்ட சிவன் சங்கீத வித்யாலயா சார்பாக நடந்த ''தென்சென்னையில் மார்கழி உத்சவம்'' என்ற இசை நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் பல்வேறு இசைக் கலைஞர்களுக்கு விருது வழங்கி ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் கௌரவித்தார்கள்.*

- *29.12.2019 அன்று சென்னை அடையாரில் உள்ள தென்மண்டல கலை மற்றும் கலாச்சார மையம் சார்பாக நடந்த பாரதீய சாஸ்த்ரீய வாத்யோத்ஸவம் என்ற நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள். தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு பாண்டியராஜனும் இந்நிகழ்ச்சயில் கலந்து கொண்டார்கள். சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டுப்புற கலைஞர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டது மிகவும் சிறப்பு.*

- *30.12.2019 அன்று வில்லிவாக்கம் பகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்கள். அங்குள்ள காமாக்ஷி அம்மன் கோவில், அகஸ்தீஸ்வரர் கோவில், வலம்புரி விநாயகர் கோவில், ஐயப்பன் திருக்கோயில், ஆகிய கோவில்களுக்கு விஜயம் செய்து அங்கு திரண்டிருந்த பக்தர்களுக்கு ஆசி வழங்கினார்கள்.*

- *31.01.2019 முதல் 02.01.2020 வரை ஆழ்வார்பேட்டை ஆஸ்திக ஸமாஜம் ஸ்ரீமடம் முகாமில் நடைபெற்ற மும்மூர்த்திகள் சங்கீத விழாவில் முழுக்கமுழுக்க வெளிநாடு வாழ் இந்தியர்கள் மட்டும் பங்குபெற்ற இசைக்கச்சேரிகள் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் பங்கேற்ற கலைஞர்களுக்கு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஆசி வழங்கினார்கள்.*

- *04.01.2020 அன்று கிழக்கு தாம்பரம் சங்கர வித்யாலயா பள்ளிக்கு விஜயம் செய்து 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வை எழுத இருக்கும் மாணவர்களுக்கு ஆசி வழங்கினார்கள். பின்னர் நெமிலிச்சேரி வேதபாடசாலையில் நடைபெற்ற கனபாராயண நிகழ்ச்சியில் பங்கேற்று ஆசி வழங்கினார்கள். அதே விழாவில் ஸ்ரீ பெரியவாள் அவர்களிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு பல வருஷங்களாக கைங்கர்யம் செய்து வந்த வயதான பக்தர்கள் நான்கு பேர்கள்- 1. பெயிண்ட் வெங்கட்ராமய்யர், 2. கடலூர் டாக்டர் நாராயணன், 3.கடலூர் காமேஸ்வர ஐயர், திருக்காட்டுப்பள்ளி ஸ்ரீ நாராயணஸ்வாமி ஐயர் ஆகியோருக்கு பட்டம் அளித்து கௌரவித்தார்கள்.*

- *05.01.20 அன்று மைலாப்பூர் சங்கரமடத்திற்கு விஜயம்.*

- *06.01.20 அன்று மைலாப்பூர் சமஸ்க்ருத கல்லூரியில் நூல் வெளியீட்டு விழா - கலைமகள் பத்திரிகையால் 1953, 1957ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் உரைகள் உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி ஸ்ரீமதி ப்ரபா ஸ்ரீதேவன் அவர்களால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு "WISDOM AND GRACE & LECTURES OF SRI MAHASWAMI" என்ற பெயரில் நூல் வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் தனது திருக்கரங்களால் இந்நூலை வெளியிட திரு. நல்லி குப்புஸ்வாமி அவர்கள் பெற்றுக் கொண்டார். ஸ்ரீமதி.தேவகி முத்தையா, ஸ்ரீ கீழாம்பூர் சங்கரசுப்ரமண்யம், கலைமகள் ஸ்ரீ ஆர் நாராயணஸ்வாமி ஆகியோர் முக்கிய விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.*

- *07.01.20 அன்று ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள அக்ஷர் அர்போல் சர்வதேச பள்ளிக்கு விஜயம் செய்த ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அங்குள்ள மாணவர்களுக்கு ஆசி வழங்கினார்கள். இந்த பள்ளி சென்னை ஆடிட்டர் ஸ்ரீ கீ. சுப்ரமண்யம் அவர்களால் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது.*

- *08.01.20 அன்று ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்மன் பக்தர்கள் பாத யாத்திரை சபையினரால் வருடந்தோறும் நடத்தப்படும் பாதயாத்ரை துவக்க விழா வடபழனி முருகன் கோவிலில் நடைபெற்றது. அதற்காக வடபழநி வந்திருந்த ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுக்கு கோவில் நிர்வாகம் சார்பாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. சுவாமி தர்சனம் செய்த பிறகு பாதயாத்ரையை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் துவக்கி வைத்தார்கள். பின்னர் முகாமிற்கு திரும்பிய ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ப்ரதோஷ பூஜை செய்தார்கள். பூஜை முடிந்த பிறகு ஸ்ரீ மஹாஸ்வாமிகள் சித்தியான தினமான இன்று பாரதீய வித்யாபவனில் வேத பாட நிதி டிரஸ்ட் மூலம் நடைபெற்ற ஸ்ரத்தாஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.*

- *10.01.2020 அன்று ஸ்ரீமடம் முகாமில் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர ஸ்வாமி சன்னதியில் ஆருத்ரா தர்சன பூஜை வழக்கப்படி ஏகாதச ருத்ர அபிஷேகம் நடந்தது.*

- *11.01.2020 அன்று ஸ்ரீமடம் முகாமில் சம்ப்ரதாய சதஸ் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 500 குழந்தைகள் கலந்து கொண்டு ஸ்லோகங்கள் மற்றும் பாடல்களை பாடினர்.*

- *12.01.2020 அன்று ஆலந்தூரில் புதிதாக திறக்கப்பட்டுள்ள சங்கர நேத்ராலயா வளாகத்தில் நடைபெற்ற ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஆராதனை விழாவில் பங்கேற்றார்கள்.*

- *அன்று மாலை பம்மல் சங்கர வித்யாலயாவில் ஸ்ரீ சங்கரா பொது மருத்துவமனையின் பவழ விழா மற்றும் சங்கரா கண் மருத்துவமனையின் வெள்ளி விழா இணைந்து நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்ட ஆசார்ய ஸ்வாமிகள் இந்த மருத்துவமனைகளில் நீண்ட நாட்களாக சேவை செய்து வரும் ஊழியர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு நினைவப்பரிசு அளித்து ஆசி வழங்கினார்கள்.*

- *பின்னர் மீனம்பாக்கம் விமான நிலைய வளாகத்தில் உள்ள ஸ்ரீ சக்தி சாந்தியம்மன் ஆலயத்திற்கு விஜயம் செய்தார்கள்.*

- *13.01.2020 அன்று நங்கநல்லூர் விநாயகர் கோவிலுக்கு விஜயம்*

- *14.01.2020 அன்று விச்வ இந்து வித்யா கேந்த்ரா வேதிக் கல்வி அறக்கட்டளை சார்பாக திருவான்மியூர் கிருஷ்ண மந்திரம் கோவிலில் நடைபெற்ற சுக்லயஜுர் வேத மண்டல பாராயண பூர்த்தி விழாவில் பங்கேற்றார்கள்.*

- *பின்னர் புகழ்பெற்ற மருந்தீஸ்வரர் கோவிலுக்கு விஜயம் செய்து ஸ்வாமி தர்சனம் செய்தார்கள்.*

- *15.01.2020 சங்கராந்தி அன்று ஸ்ரீமடம் முகாமில் சூர்யநாராயண பூஜை செய்து பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.*

- *அன்று மாலை ஆஸ்திக சமாஜத்தில் ப்ரும்மஸ்ரீ சுந்தர்குமார் அவர்கள் சனத் சுஜாதீய சப்தாஹ உபன்யாசம் செய்தார்கள்.*

- *16.01.2020 அன்று ஸ்ரீமடம் முகாம் அமைந்துள்ள ஆஸ்திக சமாஜத்தில் மாடுகளுக்கு பூஜை செய்யப்பட்டு மாட்டுப்பொங்கல் கொண்டாடப்பட்டது. காஞ்சீபுரத்திலும் ஸ்ரீமடம் கோசாலை, ஏனாத்தூர் கோசாலை மற்றும் வேடலில் உள்ள நாட்டுப் பசுக்களுக்காக ப்ரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள கோசாலைகளில் மாட்டுப்பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஸ்ரீமடத்தின் யூனிவர்ஸிடி வளாகத்திலும் மாட்டுப்பூஜை நடைபெற்றது.*

- *அன்று மாலை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள ஸ்ரீ லக்ஷ்மி காமாக்ஷி ஆலயத்திற்கு விஜயம் செய்த ஆசார்ய ஸ்வாமிகள் அங்கு காமாக்ஷி அம்பாளை தர்சனம் செய்து கொண்டு நடைபெற்ற கோபூஜையில் பங்கேற்றார்கள்.*

- *21.01.2020 அன்று ராஜகீழ்பாக்கம் ஸ்ரீ மஹாஸ்வாமி வித்யா மந்திர் பள்ளி வளாகத்தில் அனுக்ரஹ வர்ஷா என்ற ஸ்ரீ மஹாஸ்வாமிகள் குறித்த சிறப்பு டிஜிட்டல் அருங்காட்சியகத்தை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் துவக்கி வைத்து மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் அனுக்ரஹம் வழங்கினார்கள்.*

*இந்நிகழ்ச்சியில் தேனி சித்பவானந்தா ஆச்ரம ஸ்ரீ ஓம்காரானந்த ஸ்வாமிகள், RSS தலைவர் திரு மோகன் பகவத் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றார்கள்.*

- *23.01.2020 வியாழக்கிழமை மாலை 4.00 மணி அளவில் ஸ்ரீ பெரியவாள் அவர்களுக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி கோவிலில் கோவில் மரியாதை செய்யப்பட்டது. சுமார் 3.45 மணிக்கு ஸ்ரீபெரியவாள் பக்தர்கள் புடைசூழ வேதகோஷங்கள் முழங்க கங்கை கொண்டான் மண்டபம் வந்தடைந்து அங்கு திரளாக கூடியிருந்த பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்து அனுக்ரஹித்தார்கள். 4.00 மணிக்கு ஸ்ரீ பார்த்தசாரதி கோவிலிலிருந்து ஸ்ரீ சடாரி பல்லக்கில் கோஷ்டி, வாத்யம், குடை, வேதபாராயணத்துடன் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கங்கைகொண்டான் மண்டபம் வாசலில் மாலை மரியாதை செய்யப்பட்டு ஸ்ரீ சடாரி வைக்கப்பட்டு கோவில் மரியாதைகளுடன் கோவிலுக்கு அழைத்து வரப்பட்டார்கள். கோவில் கோபுர வாசலில் அறநிலையத்துறை நிர்வாக அதிகாரிகள், பட்டாச்சார்யார்கள் மரியாதையுடன் வரவேற்றார்கள். நேராக மூலவர் ஸ்ரீ பார்த்தசாரதி சந்நிதிக்கு அழைத்து வரப்பட்டு ப்ரத்யேக அர்ச்சனை, ஆராதனை செய்யப்பட்டு ஆரத்தி எடுத்து தர்சனம் செய்வித்தார்கள். சந்நிதியில் சால்வை, மாலை அணிவித்து பஞ்சமுத்ரை மரியாதை செய்விக்கப்பட்டது. அங்கிருந்து தாயார் சன்னதி, ஸ்ரீ வரதராஜர் சன்னதி, ஸ்ரீ நரசிம்மர் சன்னதி, ஸ்ரீ ஆண்டாள் சன்னதிகளுக்கு அழைத்து வரப்பட்டு ஒவ்வொரு சன்னதியிலும் சால்வை மரியாதை செய்து பஞ்சமுத்ரை மரியாதை செய்யப்பட்டது. த்வஜஸ்தம்ப மண்டபத்தில் எழுந்தருளி, கோவில் பட்டாச்சாரியர்கள் மற்ற சிப்பந்திகள் யாவருக்கும் தகுந்த மரியாதை செய்து அனுக்ரஹ பாஷணம் செய்தார்கள். கோவில் மரியாதைகளுடன், குதிரை கோஷ்டி நாமஸங்கீர்த்தனங்களுடன் கோவில் புஷ்கரத்தை பிரதக்ஷிணமாக வந்து மாடவீதி வழியாக ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கங்கை கொண்டான் மண்டபம் வந்தடைதார்கள், அனுக்ரஹ பாஷணம் முடிந்து ஸ்ரீமடம் முகாம் ஆஸ்திக சமாஜம் வந்தடைந்தார்கள். ஸ்ரீ பெரியவாள் அவர்களுடன் 300க்கும் மேற்பட்ட பக்தர்கள் ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமியை தர்சனம் செய்தார்கள். வழிநெடுக ஏராளமாக பக்தர்கள் கூடி தர்சனம் செய்து மிகவும் சிறப்பாக அமைந்தது.*

- *27.01.2020 ஆஸ்திக சமாஜத்தில் இருந்து ஸ்ரீமடம் முகாம் புறப்பட்டு சென்னை புறநகர் பகுதியான அம்பத்தூரில் உள்ள சின்ன திருப்பதி என்று அழைக்கப்படும் ஸ்ரீநிவாஸ பெருமாள் கோவிலுக்கு வந்தடைந்தது. அம்பத்தூருக்கு வந்த ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுக்கு ஊர் எல்லையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பிப்ரவரி மாதம் 3ம் தேதி வரை அம்பத்தூரில் பூஜை நடைபெறும்.*